



# தொண்டன்

ஏப்பிரல் - மே - 2007 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


ஏப்பிரல்-மே - 2007

மலர்-39 இதழ்-03



**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்



**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486


# உள்ளே




| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - 01 |
| கிறிஸ்துவின் உயிர்ப்பும் | - 02 |
| படுவான் கரையே... | - 04 |
| மாணவர் பக்கம் | - 06 |
| திருச்சபையும்.... | - 07 |
| காலமிளவேனிலடி... | - 09 |
| மருத்துவம்... மருத்துவம்... | - 10 |
| மனக்கோலம் | - 14 |
| மறைஅறிவை வளர்ப்போம் | - 17 |
| அரசியல்... அரசியல்... | - 19 |
| இரண்டாம் வத்திகான்.... | - 22 |
| ஈழத்தின் ஆதிக்குடிகள்... | - 24 |
| விவிலியம் கற்போம் | - 27 |
| அறிவை வளர்ப்போம் | - 28 |



விலை : *20/=*

ஆண்டு சந்தா *: 300/=*

(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...


ஏப்ரல் மாதத் தொண்டன் மே மாதத்தையும் இணைத்து இம்முறை இருமாத இதழாக வெளி வருகிறது. இதற்குக் காரணங்களைப் பட்டியலிட நாம் விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் நடைமுறைச் சிக்கல்களே காரணம். உரிய காலத் துக்குள் தொண்டன் உங்கள் கைகளில் தவழ முடிந்த வரை முயற்சிப்போம்.

ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து உயிர்த்த பெருவிழாவை கடந்த மாதத்தில் கொண்டாடினோம். இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ விசுவாசத்தின் உறுதியான அத்திவாரமாக இருக்கின்ற அதே வேளை நாளும் தொடரவேண்டிய நமது உயிர்ப்பு வாழ்வின் ஆரம்பப் புள்ளியாகவும் இருக்கின்றது. நமது சிந்தனை, செயல் உள்ளிட்ட வாழ்க்கை நிகழ் வுகளில் கிறிஸ்துவின் உயிர்ப்பு ஊடறுத்துச் செல் லும் போதுதான் - அவ்வாறு செல்ல நாம் வழிவிடும் போதுதான் உயிர்ப்பு நமது வாழ்வில் அர்த்தம் பெறுகிறது. இதனையே புனித பவுலடிகளார் "நாம் நாளும் பாவத்திற்கு இறந்து புண்ணியத்தில் உயிர்க்க வேண்டும்" என்கின்றார்.

ஏப்ரல் மாத இறுதி வாரத்தில் வத்திக்கான் திருப்பீடத் தூதர் பேரருள்திரு மாறியோ செனாரி ஆண்டகை மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தார். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தஞ்சமடைந் துள்ள மக்களைப் பார்வையிட்ட அவர் அம்மக்களின் பிரச்சனைகளையும், தேவைகளையும் கரிசனை யோடு கேட்டறிந்துகொண்டார். இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டும் எனத் திருத்தந்தை தெரிவித்திருந்த சில நாட்களுக்குள் திருப்பீடத் தூதரின் விஜயம் இடம் பெற்றது குறிப்பிட வேண்டியது. திருச்சபை எப்போதும் பாதிக்கப்பட்ட மக்கள்பால் தனது அன்பையும், கரிசனையையும் காட்டத் தவறுவதில்லை. யுத்தத்தாலோ இயற்கை அனர்த்தங்களாலோ அவலங்கள் ஏற்படும் போதெல்லாம் அனைவரையும் முந்திக்கொண்டு திருச்சபையின் சமூக நிறுவனங்கள் அருந்தொண்டாற்றி வருவதை அனைவரும் அறிவர். திருப்பீடத் தூதரின் விஜயம் இப்பணிகளை மேலும் உற்சாகப்படுத்துவதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அளித்து அவர்கள்பால் அனைவரது கவனத்தையும் திரும்பியிருக்கும் என்பதில் ஐயமில்லை. உதவிகளில் தங்கிவாழும் இம்மக்கள் தமது உரிமை களைப்பெற்று தமது வாழ்வைத் தாமே முன்னெடுத்து பாதுகாப்போடு வாழும் நாள் விரைவில் மலர வேண்டும் என்பதே அனைவரது விருப்பமுமாகும்.

கிழக்கிலே யுத்த அகதிகள் எனில் தெற்கிலே வெள்ள அகதிகள் பெருகியுள்ளனர். இந்நாடு ஏதோ ஒரு வகையில் அகதிகளின் தேசமாகவே மாறிக் கொண்டிருக்கிறது. பாகுபாடுகளைக் கடந்து அனைத்து அகதிகளையும் மனிதாபிமான நோக்கத் தோடு அணுகவேண்டும். அவர்கள் வாழ்வை மீளவும் கட்டியெழுப்ப உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது விருப்பமும் வேண்டுதலு மாகும்.

- இணைஆசிரியர் -



## இறைவாக்கு

"நீங்கள் கிறீஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்"

(கொலோ. 3:1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்துவின் உயிர்ப்பும் கிறிஸ்தவர்களின் உயிர்த்தெழுதலும்

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" என இந்திய நாடு சுதந்திரம் பெற்றதை எண்ணி அன்று பாரதி பாடினான். அதேபோன்று தூயபவுலும்
"சாவு முற்றிலும் ஒழிந்தது,
வெற்றி கிடைத்தது.
சாவே, உன் வெற்றி எங்கே?
சாவே, உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி 15:54) என கிறிஸ்துவின் உயிர்ப்பை எண்ணி, உயிர்ப்பினால் எமக்குக் கிடைத்த விடுதலையை எண்ணி வெற்றிக் கீதம் பாடினார்.

ஆம், கிறிஸ்துவின் உயிர்ப்பானது நாம் கொண்டாட வேண்டிய ஒரு வெற்றி விழா. மீட்பு வரலாற்றில் பாவத்தின்மீது-சாவின் மீது இறைவன் அடைந்த இறுதி வெற்றியாகும். தூய யோவானின் கருத்துப்படி உயிர்ப்பானது
இருளின்மேல்
ஒளி கொண்ட வெற்றி,
பகைமையின்மேல்
அன்பு கொண்ட வெற்றி,
சாவின்மேல்
வாழ்வுகொண்ட வெற்றி.

வாழுமுன் வரலாறு வகுத்தவரை கல்லறைக்குள் அடக்கிவிட எண்ணினர். உண்மையின் உருவானவரை உருக்குலைத்துவிட எண்ணினர், உயிருள்ள இறைவனை அழித்துவிட எண்ணினர், ஆனால் கல்லறையே புதுவாழ்வு தரும் கருவறையாக மாறியது.

"உயிர்ப்பும் உயிரும் நானே" (யோவா 11:25) என்று மொழிந்தவரை கல்லறை அடக்கிக் கொள்ள முடியவில்லை. "நானே வழியும் உண்மையும் உயிரும்" (யோவா 14:6) என்று பகர்ந்தவரை சாவு ஆட்கொள்ள முடியவில்லை. "நானே உலகின் ஒளி" (யோவா 8:12) என்றவரை கல்லறை இருள் மேற்கொள்ள முடியவில்லை. "சாவே, உன் வெற்றி எங்கே?" (1 கொரி 15:54) என்று வீர முழக்கமிட்டு, விழுந்தவர், வெற்றியின் வேந்தனாக எழுந்தார்.

திருச்சபையின் திருவழிபாட்டு காலச்சக்கரத்திலே பல்வேறு விழாக்களை நாம் கொண்டாடி மகிழ்ந்தாலும், விழாக்களிலே மகத்தான விழாவாக, நம்பிக்கையின் அடிப்படையும், நற்செய்தியின் நம்பகத் தன்மையும் தன்னகத்தே கொண்ட விழாவாக உயிர்ப்பு விழா விளங்குகின்றது. "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி 15:14) என்கிறார் தூய பவுல்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை உயிர்ப்பாகும். "சாவின் மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாக இறைமகன் அழித்து விட்டார்" (எபி 2:14). அது மாத்திரமல்ல, "வாழ்நாள் முழுவதும் சாவு பற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களையும் விடுவித்தார்" (எபி. 2:15). அவர் சாவிலிருந்து மட்டுமல்ல, சாவின் பயத்திலிருந்தும் எம்மை விடுவித்தார். அதில்தான் உயிர்ப்பின் முக்கியத்துவம் பொதிந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது.சாவை நினைத்து நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில் கிறிஸ்துவைப் போன்று மகிமையான உயிர்ப்பு எமக்காகக் காத்துள்ளது. நாமும் உயிர்த்தெழுவோம் என்பதற்கு உத்தரவாதம் கிறிஸ்துவின் உயிர்ப்பே. "அவரே இறந்தோருள் முதலில் உயிர் பெற்று எழுந்தவர்" (தி.வெ.1/4) முதற்கனி. மனிதர்களைத் தமது சாயலாக மாற்றும் புதிய மனிதன். இறந்தோரிடமிருந்து எழுந்த இறைவன் இறக்கும் மனிதரையும் எழுப்ப வல்லவராக இருக்கிறார். எனவேதான் தூய பவுல் "ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச்செய்த கடவுளே, எங்களையும் அவரோடு உயிர்த்தெழச்செய்து அவர் திருமுன் நிறுத்துவார். உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும்" (2 கொரி 4:14) என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

இயேசுவின் உயிர்ப்பை 2000 ஆண்டுகளுக்கு முன்னால் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வாக மட்டும் வரையறை செய்தோமெனில், உயிர்ப்பின் மகத்துவத்தை, அது எம்மில் ஏற்படுத்தும் தாக்கத்தை பொருளற்றதாக்கி விடுவோம். அன்று உயிர்ப்பின் செய்தியை மூடி மறைக்க, குழிதோண்டிப் புதைக்க முயன்ற சமயத் தலைவர்களுக்கும் எமக்கும் வேறுபாடே இருக்காது. உயிர்ப்பை எம்மில், எம் சூழலில் அனுதினமும் நிகழும் நிகழ்வாகக் காண்கிறோமா?

"உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்" (லூக் 24:5) என்ற வார்த்தைகளை உரத்துச் சிந்தித்தோமெனில் நமது போலி வேடம் கலைந்துவிடும். அன்றும் இன்றும், நானும் நீங்களும், உயிர்த்த இயேசுவை புதைக்கப்பட்ட கல்லறைகளிலும், புரட்டப்பட்ட கல்லிலும், தீட்டப்பட்ட ஓவியத்திலும், வடிக்கப்பட்ட சிற்பத்திலும், இயற்றப்பட்ட பாடலிலும் தேடிக் கொண்டிருக்கிறோம். அப்படித்தானே?

அவர் வாழுகின்ற ஆண்டவராக, வாழ்வோரின் இறைவனாகி விட்டார். அவர் வாழுகின்ற மனிதரில் உயிர்த்து வாழ்கின்றார். இனி அவரைத் தேட வேண்டியது வாழ்வோரின் மத்தியில், அதுவும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், சாதாரணமானவர்கள், சாமானியர்கள், சிறியவர்கள், சிறப்பில்லாதவர்கள், அனாதைகள், விதவைகள், விவஸ்தையில்லாதவர்கள், விலாசம் இழந்தவர்கள் இவர்கள் மத்தியில்தான் தம்மைக் காண முடியும் என உயிர்த்த இயேசுவே கூறுகின்றார் - "அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" (மத் 28:10) என்கிறார். எதற்காக கலிலேயாவைக் குறிப்பிடுகிறார்? ஏனெனில் கலிலேயா ஒதுக்கப்பட்டவர்கள் வாழுமிடமாக, சமுதாயத்திலே புறக் கணிக்கப்பட்டவர்கள் வாழுமிடமாக அக்காலத்தில் கருதப்பட்டது.

திருச்சபை என்பது உயிர்த்த ஆண்டவரின் மேல் நம்பிக்கை கொண்ட, உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் இயக்கப்படும் சபை அல்லது உயிர்த்து வாழும் இயேசுவை உயிர் வாழும் ஒருவர் ஒருவரில் கண்டு மகிழும் சபையாகும். ஏனெனில் அவர்கள் அனைத்திலும் உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணர்ந்தார்கள்.

ஒரு கிறிஸ்தவன் எந்த இடத்தில் வாழ்ந்தாலும், எப்படி வாழ்ந்தாலும் அங்கு உயிர்ப்பின் மணம் கமழ வேண்டும். மகிழ்ச்சி பரவ வேண்டும். நம்பிக்கை துளிர்க்க வேண்டும். உறவு உறுதி பெற வேண்டும். உலகம் முடிவு வரை நம் உடனிருக்கும் உயிர்த்த இயேசு நம் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளார். அவரைக்கண்டு கேட்டு தொட்டு அனுபவிக்க வேண்டும். அவரது அடிச்சுவடுகளில் நாம் நடந்து செல்கையில் அவருடைய மனநிலையும் மதிப்பீடுகளும் எம்முடையதாக மாறுகையில் உயிர்ப்பைத் தொடரச் செய்கிறோம்.

உயிர்ப்பு என்பது இன்றும் என்றும் நிகழ் காலத்திலும் வருங்காலத்திலும் நிகழ்ந்து கொண்டிருப்பதும், நிகழ வேண்டியதுமான ஒன்றாகும். எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் உயிர்த்த இயேசு தம் பிரசன்னத்தினாலும், ஆற்றலினாலும் தடைகளைத் தகர்த்து மீளுயிர் கொடுத்து மாற்றத்தை ஏற்படுத்துகின்றாரோ, அங்கு உயிர்ப்பு நிகழ்கின்றது. அது எல்லோரின் கவனத்தையும் காவு கொள்ளும் பாரிய நிகழ்வாகவும் இருக்கலாம், அல்லது எவருடைய கவனத்தையும் ஈர்க்காத சாதாரண சம்பவமாகவும் இருக்கலாம்.

உயிர்த்த இறைமக்களைக் கொண்ட திருச்சபையின் பணி, அநீதியையும் வன்முறையையும் உருவாக்கும் பாரிய பாகுபாடுகள், வறுமை ஆகியவற்றினால் உடைந்து சிதறுண்டிருக்கும் உலகிற்கு வெறும் வார்த்தையினால் மட்டுமல்ல, உயிர்தரும் செயல்களினாலும் உயிர்ப்பு பற்றிய நற்செய்தியை அறிவிப்பதுதான்.

நாம் ஒவ்வொருவரும் நமக்கே உரிய விதத்தில் நாம் வாழும் சூழலில், நாம் சந்திக்கும் பலதரப்பட்ட மக்களுக்கும் உயிர்ப்பின் கனிகளான நம்பிக்கை, மகிழ்ச்சி, அமைதி, அன்பு, நீதி, இரக்கம், கரிசனை போன்றவற்றை வழங்க ஆயத்தமா? நாம் உயிர்த்த இயேசுவினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் அளவைப் பொறுத்துத்தான் இத்தகைய சவால் விடுக்கும் வினாக்களுக்கு எமது பதிலும் அமைந்திருக்கும்.

அருட்தந்தை. பி.ஜோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படுவான் கரையே அஸ்தமிக்கின்றது

அண்மையில் இலங்கை இராணுவத்தினரால் முன்னெடுக் கப்பட்ட படுவான்கரை மீதான படையெடுப்பினால் மட்டக்களப்பு நகரையே தோற்றுவித்து ஆண்டாண் டுகாலமாக வந்தாரை வாழ வைக்கும் வளம் பொருந்திய படுவான் புலம் இன்று காட்டு விலங்குகளின் புகலிடமாகவும், செல்புதைந்த பூமியாகவும், மயான வெளியாக வும் காட்சியளிக்கின்றது.

1983இல் ஏற்பட்ட இன அழிப்பு கூர்மையடைந்த வேளை யிலும் இப்பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்தபடி தமது சொந்த நில புலன்களுடன் அங்கேயே வாழ்ந்து வந்தனர். இன்று அந்நிலைமாறி சொந்தத் தேசத்துக்குள்ளே துயருடன் எது வுமற்ற (மறுக்கப்பட்ட) வாழ் வையே சுமக்க வேண்டிய நிற்பந் தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்கள் ஆயிரக்கணக் கில் தமது வாழ்விடங்களையும், ஜீவனோபாயத் தொழிலையும் கை விட்டபடி தமது உயிரைப் பணயம் வைத்து பல்குழல் பீரங்கி, தூர எறிகணை மிரட்டல்களுக்கு மத்தி யில் கறுத்தப்பாலம், மண்முனைத் துறை, பட்டிருப்பு, மண்டூர் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதே சத்துக்குள் நுழைவதற்காக பல மைல் தொலைவிலிருந்து கால் நடை யாகவும் மாட்டு வண்டில்களிலும், பிற இயந்திர வாகனங்களிலுமாகச் சென்றனர். இதன் போது சோத னைச் சாவடிகளில் கெடுபிடியும், பல்வேறு குழுவினர்களால் இனந் தெரியாத நிலையில் ஆண் பெண் வேறுபாடின்றி கடத்தப்பட்டுள் ளனர். ஏனைய மக்கள் கைது செய்யப்பட்ட அகதிகள் போன்று மண்முனைப்பற்று, எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பாடசாலைகளிலும், பொது விளையாட்டு மைதானங்களிலும், மர நிழல்களிலும், உறவினர் வீடுகளிலும் அடைக்கலம் புகுந்துள் ளனர். இவ்வாறு இடம் பெயர்ந்தவர் களை ஒரே முகாமில் ஆயிரக் கணக்கில் தங்க வைத்து பொலித் தீன் கூடாரங்களை மாத்திரமே கொடுக்கின்றனர். ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காலநிலைச் சீர்கேடு காரணமாக பகல் வேளைகளில் வெப்பநிலை அதிகரித்துக் காணப் படுவதுடன், இரவு வேளையில் அதிகம் பனி கொட்டுகின்றது. இதனால் சிறு குழந்தைகள் தொடங்கி முதியவர் வரை அம்மை நோய், காய்ச்சல், வயிற்றோட்டம் முதலிய பல் வகையான தொற்று வியாதிகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

இதனைத் தடுப்பதற்குப் போது மான சுகாதார அடிப்படைத்தேவை களான வைத்திய நடவடிக்கை களோ, கழிப்பறை வசதிகளோ, சுகாதாரமான உணவு, மற்றும் குடிநீரோ, குடும்பங்கள் தனித்து வாழக் கூடிய தற்காலிக கொட்டில் வசதிகளோ ஏற்படுத்தப்படாமல் இம் மக்களை ஆடு, மாடுகளை ஒரே கொட்டகையில் அடைப்பது போன்று அடைத்துள்ளனர். பின்னேர வேளைகளில் அவ் இடங்களைச் சுற்றி படையினரின் ரோந்து நடவடிக்கை மும்முரமாக மேற்கொள்ளப் படுவதனால் நடமாட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சொத்துச் சுகங்களுடன் பொது நலனில் அக்கறை செலுத்தி சொந்த நிலத்தில் சுதந்திரமாக வாழ்ந்த இம் மக்களுக்கு யுத்த நெருக்கடியுடன் பல்வேறு உரிமைகள் மறுக்கப்பட்ட சமூக நெருக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுள்ளமையினால் குடும்பத் தலைவர்கள் உட்பட சிறு குழந்தைகள் வரையும் மன உழைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இதனைக் கண்டும் காணாதவர்களாய் தமக்கு மட்டும் பிரச்சினை வரப்போவதில்லை எனும் இறுமாப்பில் இம் மக்களின் நலனில் அக்கறை செலுத்தாமல் சுகபோக வாழ்வை அனுபவிப்போரை நாளாந்தம் காணும்போது வருத்தமாக இருக்கிறது. செத்தாலும் சொந்த மண்ணில் சாவோம் என்ற முனைப்பில் கூடாரங்களைக் கைவிட்டு மீண்டும் சொந்த ஊர் செல்லும் பாதைகளை நாடும் போது சோதனைச் சாவடிகள் முட்கம்பிகளால் சூழப்பட்டு இம் மக்களை அங்கே செல்ல விடாது அதிகாரத் தோரணையில் மிரட்டுகின்றனர். இதனால் நிற்கதியாகியுள்ள இம் மக்களின் வாழ்க்கையின் ஜீவாதாரமாய் இருந்த கால் நடைகளும், வேளாண்மை அறுவடையும் யாருமே பராமரிக்க முடியாமல் அழிந்து செல்கின்றன. அதை விட காட்டுப் பிரதேசத்தில் ஏற்படுகின்ற யுத்தம் காரணமாக பீதியடைந்த காட்டு யானைகள் மக்கள் வசித்த ஊர்களுக்குள் நுழைந்து இம் மக்கள் சிறுகச் சிறுகத் தேடி அமைத்த வீடுகளையும், நெல் வயல்களையும், தென்னை, பலா, மாபோன்ற பயன் தரு மரங்களையும் நூற்றுக்கணக்கில் முறித்து தள்ளியதுடன், வீடுகளை உடைத்து தங்கியிருந்த ஒரு சில கால் நடைப் பராமரிப்பாளர்களையும் விரட்டியடித்துள்ளது. இச் செயலினால் யுத்தத்தால் இடம் பெயர்ந்து சென்ற இம் மக்கள் சிறிது காலத்தின் பின் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் சென்றாலும் தமது வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க முடியாமல் பொருளாதாரத்திலும், கல்வி அறிவிலும் பின் தங்கிய சமுதாயமாகவே வாழ வேண்டிய கட்டாய நிலைக்குள் தள்ளப்படுவர்.

-எஸ் . டி . என்.

# உயிர்ப்பின் உன்னதம்!

தவக்காலம் அழைத்து நின்ற தருணமதில்
தனித்துவமாய் நீ புரிந்ததென்ன புன்மனமே!

பவக்கடலின் படர் அலையில் பயணமதோ?
பாடுகளுக்கு அஞ்சிடாமல் கொடும் நினைவோ?

தேவன் அவன் திருமுன்னே ஒரு கணத்தில் - நீ
தேடினையோ மன அமைதி அக்கணத்தில்?


கட்டளைகள் அற்புதமாய்க் கொடுத்ததன்று!
காற்றினிலே எழுத்தாகிப் போனதேன் இன்று!

விண் அவனின் திருத்திட்டம் நிறைவேற்ற
விமலன் அவன் எழுதி வந்தான் கலைத்தோற்றம்!

சிலுவை எனும் சின்னமதன் பாடுபொருள்மாற்றிச்
சிறைமீட்டான் மானுடத்தின் இழிவெலாம் அகற்றி!

தவக்காலம் இது தவத்தின் பொற்காலம் - நம்தவறு
திருத்தித் தெய்வீகம் கூட்டிடும் நற்காலம்!


அவக்காலம் ஆக்கி விடில் இனி வருவதெக்காலம்?
உயிர்ப்பின் மகிமையிலே இசைப்போமே எக்காளம்!



-முறையூர் சந்திரசேகரன் சசீதரன்
அம்மன் கோயில் வீதி, முறக்கொட்டான்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெந்தக்கோஸ்து நிகழ்வும் பேதுருவின் திருவுரையும் திருச்சபை வளர்ச்சியும்

அப்போஸ்தலர் பணியின் நோக்கமான, ஜெருசலேம் தொடங்கி உலகின் கடையெல்லை வரை நற்செய்தி கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதற்கமைய, இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான யூதாசின் இடத்திற்கு, மத்தியாஸ் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அவர் பதினொருவருடனும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

பின்பு பெந்தக்கோஸ்தே எனும் நாளிலே அவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடியிருக்கையில் பரிசுத்தாவியானவர் அவர்கள் அனைவர் மீதும் அக்கினி நா வடிவில் இறங்கினார். ஒவ்வொருவரும் அயல்மொழிபேசத் தொடங்கினர். ஒவ்வொருவரும் தத்தம் மொழியில் அதனை விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருந்தது. எல்லோரும் திகைத்துப் போய் மனம் குழம்பி நிற்கையில் பேதுரு அவர்கள் மத்தியில் எழுந்து பேருரை ஒன்றினை ஆற்றினார். அவரது உரையினைக் கேட்டு அன்றைய நாளிலேயே மூவாயிரம் பேர் திருமுழுக்குப்பெற்று திருச்சபையில் இணைந்து கொண்டனர்.

இவ்வாறு பரிசுத்தாவியானவரால் வழிநடத்தப் பட்டு வந்த திருச்சபையிலே முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையானது அனைவரையும் கவரக் கூடியதாய் இருந்தது. அவர்கள் அனைவரும் அப்பம் பிட்பதிலும், செபிப்பதிலும், நட்புடன் உறவாடு வதிலும், அப்போஸ்தலர்களின் படிப்பினைகளைக் கேட்பதிலும் சிறந்து ஏனையோருக்கு முன்மாதிரி கையாய் இருந்தனர்.

மேலும், திருச்சபையில், பரிசுத்தாவியின் துணையுடன் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகிக் கொண்டே சென்றது. அதற்கமைய பேதுருவும் யோவானும் ஆலயத்திற்குச் செல்கையில் அழகு வாயிலில் பிறவியிலேயே முடமான ஒருவ னைக்கண்டு இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையினல் அவனைக் குணமாக்கி மக்களுக்கு இறைவன் மேலுள்ள விசுவாசத்தை மேலும் வலுவூட்டினார்கள்.

இவ்வாறு பிறவி முடவன் குணமானதைக்குறித்து மக்கள் அனைவரும் திகைத்துப்போயினர். இதனைக் குறித்துப் பேதுரு நான்கு மறை உண்மைகளின் மூலம் அவர்களுக்கு நீண்டதொரு உரையினை வழங்கினார். அவையாவன: கடவுள் அவரை அனுப்பினார், நீங்கள் அவரைக் கொன்றீர்கள், கடவுள் அவரை உயிர்ப்பித்தார், நாங்கள் அதற்குச் சாட்சிகள் என்று கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு அவரது உரை மூலம் சான்று பகர்கின்றார்.

இவ்வாறு பேதுரு உரையாற்றியதனால் யூத சங்கத்தினரால் விசாரிக்கப்பட்டு, சிறைக்காவலில் வைக்கப்பட்டு மறுநாள் தலைவர்கள் மூப்பர்கள் முன்னிலையில் விசாரிக்கப்படுகையில், பேதுரு தூய ஆவியால் உந்தப்பட்டு இயேசுக் கிறிஸ்துவைக் குறித்து இன்னும் துணிவுடன் பேசத் தொடங்கினார். இதனைக் கண்ட சங்கத்தார் கல்வியறிவு அற்ற இவர்கள் இவ்வாறு துணிவுடன் பேசுவதைக் குறித்து வியந்து இவர்கள் இயேசுவுடன் இருந்ததையும், குணமான மனிதன் சாட்சியாய் விளங்குவதையும் குறித்து ஏதும் கூறமுடியாத நிலையில் "இனி இயேசுக் கிறிஸ்துவின் பெயரைக் குறித்துப்பேசக் கூடாது எனக் கூறி எச்சரித்து விடுதலை செய்தனர். அதற்கு பேதுருவும், யோவானும் "கடவுள் சொல் வதைக் கேட்பதற்கு மேலாக, நீங்கள் கூறுவதைக் கேட்க முடியாது" எனக் கூறி விடுதலையாகினர். இவ்வாறு விடுதலையாகிய சீடர்கள் சென்ற இடங்களில் எல்லாம் "இயேசுவே ஆண்டவர்" எனச் சான்று பகர்ந்தனர். இவர்கள் மேற்கொண்ட ஒவ்வொரு செயல்களிலும் பரிசுத்தாவியானவரின் செயற்பாட்டினைக் காண முடிகிறது. இதனால், அப்போஸ்தலர்கள் துணிவுடன் செயற்பட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு ஒரு பொது நிலையினர் வகுப்பைச் சார்ந்தவர். அவர் திருப்பணியாளர் குலமாகிய லேவியர் குலத்தைச் சார்ந்தவர் அல்லர். தன்னோடு "இருப்பதற்கு" 12 வித்தியாசமான திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தார். மறைநூல் அறிஞர்களின் உதவியையோ அல்லது திருப்பணியாளர்களின் உதவியையோ அவர் நாடவில்லை. எளிய, எதார்த்த, பொது நிலையினரை வைத்தே இறை அரசைக் கட்டியவர்.

இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின்னர் பொதுநிலையினர் "திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தனர் (திப 2:42)..., அருள் பணியாளர்கள் அருள்பணியாளர்களாகவும், துறவிகள் துறவிகளாகவும் வாழும்படிக் கவனமாகப் பார்த்துக் கொள்வது பொதுநிலையினராகிய உங்கள் பொறுப்பு" என்கிறார் பேராயர் ஃபுல்டன் ஷீன்.

**பொதுநிலையினரின் தனிச்சிறப்பு:** திருச்சபையில் அருள்பணியாளர்கள், ஆண் துறவிகள் நீங்கலாக உள்ள, அருள் சகோதரர்கள், பெண் துறவியர் மற்றும் இல்லறத்தார் அனைவரும் பொது நிலையினரே (Lay People). புள்ளி விவரப்படி திருச்சபையின் பொது நிலையினர் 99% இருக்கின்றனர். அருள் பணியாளர்கள் முதல் திருத்தந்தை வரையில் உள்ளவர்கள் 1% மட்டுமே. "திருச்சபைப் பணி கவனத்தில் கொள்ள வேண்டும்".

பொதுநிலையினரின் இவ்வுயர் நிலையை வலியுறுத்தவும், அவர்களின் ஈடுபாட்டை வளர்த்து பொறுப்புடன் செயலாற்றத் தூண்டவுமே ஆண்டுதோறும் ஜூன் 22ஆம் நாள் புனித தோமஸ் மூரின் திருவிழாவைத் தொடர்ந்து வரும் ஞாயிறைப் பொதுநிலையினர் ஞாயிறு என்று திருச்பை கொண்டாடுகிறது.

சர் தோமஸ் மூர் (1478-1535) இங்கிலாந்தில் நிதி அமைச்சராகப் பணியாற்றினார். இவர் ஒரு பொது நிலையினர். "நான் அரசனின் நல்ல பணியாளன்; அதைவிட மேலாக நான் இறைவனின் முதல் பணியாளன்" என்ற கொள்கையை உடையவர் இவர்.

# திருச்சபையும் பொது நிலையினரும்

நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்... தேவைகளுக்கு ஏற்ப பகிர்ந்து அளித்தனர் (திப 2:44-45); அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்" (திப 4:32-34).

இப்படிப்பட்ட பொது நிலையினர்தான் பெனிசியா, சைப்பிரசு, அந்தியோக்கியா ஆகிய இடங்களுக்குச் சென்று இறைவார்த்தையை அறிவித்தவர்கள். பிலிப்பியத் திருச்சபையில் எயோதியா, சிந்திக்கா போன்ற பெண் தலைவர்கள் செயல்பட்டனர். எப்பாபிராத்து பவுலுக்கு உதவியாக இருந்தார். கொலோசியத் திருச்சபையில் அர்க்கிப்பு, எப்பப்பிரா, ஒனாசிம், பிலமோன், திக்கிக்கு, யுஸ்து ஆகியோர் இறையாட்சிக்காகப் பணி புரிந்தனர். அக்கில்லா, பிரிஸ்கா தம்பதியினரின் பணி பாராட்டுக்கு உரியது. இவர்கள் அனைவரும் பொதுநிலையினரே.

"திருச்சபையைக் காப்பாற்றப் போவது ஆயர்களோ, குருக்களோ துறவிகளோ அல்ல; பொது நிலையினராகிய நீங்கள்தான். சிந்தனைத்திறனும் செயல் திறனும், ஆக்க சக்தியும் உங்களிடம் உள்ளது. ஆயர்கள், ஆயர்களாகவும், களையும் அலுவல்களையும், திரு ஆட்சியாளரிடம் இருந்து பெறுவதற்குத் திறமையுள்ள பொதுநிலையினர் தகுதி பெற்றுள்ளனர் (228).

இரண்டாம் வத்திகான் சங்க ஏடாகிய திருச்சபைக் கொள்கைத் திரட்டு எண் 37 பொதுநிலையினரைப் பற்றி பின்வருமாறு கூறுகிறது. "**அருள் பணியாளர்கள் திருச்சபையில் பொதுநிலையினர் கொண்டுள்ள மேன்மையையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அவற்றை மேம்படச் செய்ய வேண்டும். பொதுநிலையினரின் முன்மதியுள்ள அறிவுரையை விருப்புடன் அவர்கள் பயன்படுத்துவார்களாக. திருச்பையின் பணிப் பொறுப்புகளை அவரவர்களிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்து, அவர்கள் சுதந்திரத்தோடு செயல்புரிய வாய்ப்பு அளிக்க வேண்டும்.** மேலும் தாங்களாகவே பணிகளை ஏற்றுச் செய்திட அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பொதுநிலையினர் பரிந்துரைக்கும் திட்டங்களையும் கருத்துகளையும் ஆவல்களையும் தந்தைக்குரிய அன்புடன் கிறிஸ்து வின் மனநிலையோடு தனிப்பட்ட விதமாகக்

பொது நிலையினரின் கடமைகளும் உரிமைகளும் திருச்சபைச் சட்டம் தருபவை.

1) கிறிஸ்தவர்களிடையே நிலவ வேண்டிய சமத்துவம் (203), 2) பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய கடமை (209), 3) புனித வாழ்வு வாழ்ந்து புனிதத்திற்காக உழைக்கும் கடமை (210), 4) நற்செய்தி அறிவிக்கும் கடமை (211), 5) திரு ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிந்து ஆலோசனைகள் கூறும் கடமை (212), 6) தங்களுடைய வழிபாட்டு முறையில் இறைவனை வழிபடும் உரிமை (214), 7) அறப்பணிக்காக சங்கங்களை நடத்தும் உரிமை (215), 8) மறைதூதுப் பணியை ஆதரித்து ஊக்குவிப்பது (216), 9) கிறிஸ்தவக் கல்வி பெறும் உரிமை (217), 10) உரிமைகளுக்குப் போராடி பாதுகாத்துக் கொள்ளும் கடமை (222) ஆகியவை பற்றி திருச்சபைச் சட்டம் விளக்குகிறது.

**கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளில் பொதுநிலையினரின் பங்கு**

இயேசு இவ்வுலக வாழ்க்கையின்போது திருத்தூதர்களை முப்பெரும் பணிகளைச் செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தார். அவை முறையே:
1) போதிக்கும் பணி,
2) புனிதப்படுத்தும் பணி,
3) வழி நடத்தும் பணி.

**1. போதிக்கும் பணி**
01. கோவில்களில் போதித்தல்,
02. மறைக்கல்வி கற்பித்தல்,
03. மறைதூதுப்பணி ஆற்றுதல்,
04. இறையியல் படிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துதல்,
05. சமூகத் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்துதல்,
06. நற்செய்தி மற்றும் தியானக் கூட்டங்கள் நடத்துதல்,
07. விவிலியம், திருவழிபாடு மற்றும் இறையியல் வகுப்புகள் நடத்துதல்

போன்ற பணிகள் வழியாகப் போதிக்கும் பணியைச் செய்கிறோம்.

**2. புனிதப்படுத்தும் பணி**
01. அருள்சாதனங்கள் வழங்குதல்,
02. வாசகர் பணி, திருப்பீடப்பணி,
03. அருள் வேண்டல் குறிகளை வழங்குதல்,
04. நற்கருணையை அரியணை ஏற்றுதல்,
05. திருப்புகழ்மாலை மன்றாடுதல்,
06. அருள் சாதனங்களைப் பெறத் தயாரித்தல்,
07. நற்கருணை வழங்குதல்,
08. வழிபாடு நடத்துதல் ஆகிய பணிகளைச் செய்து புனிதப்படுத்தும் பணியைச் செய்கிறோம்.

**3. வழிநடத்தும் பணி**

திருமுழுக்கு, உறுதிப் பூசுதல் என்ற அருள்சாதனங்களின் அடிப்படையில் திருச்சபை அலுவல்களில் பொதுநிலையினர் பங்கு பெறுகின்றனர்.

**1. சட்டத் துறை:** திருப் பேரவையில் கலந்து ஆலோசனை வழங்கும் உரிமை.

**2. நீதித்துறை:** அருள்பணியாளர் அடங்கிய குழுவில் பொதுநிலையினரும் பங்கு கொள்ளுதல்.

**3. நிர்வாகத் துறை:** மறைமாவட்டக் குழுவில் மூவர் இடம் பெறலாம். சொத்துக்களை மாற்றும்போது பொதுநிலையினரின் அனுமதி பெறவேண்டும். மறைமாவட்டப் பொருளாளர் (491) முத்திரைக்காப்பாளர் (482) ஆகிய பதவிகளையும் பொதுநிலையினர் வகிக்கலாம். இப்படிப்பட்ட பல பணிகளைச் செய்யப் பொது நிலையினருக்குப் பயிற்சி அளிக்கப் படுகின்றது.

**பொதுநிலையினருக்கு வழங்கப்பட்ட சில பணிகள்:**
01. நிரந்தர திருத்தொண்டர்,
02. நிலையான வழிபாட்டுத் துணையாளர்,
03. நிலையான இறைவாக்குப் பணியாளர்,
04. அருள்பணி உதவியாளர்,
05. நீதிப் பணியாளர்,
06. நோயுற்றோர் அருள் பணியாளர்.

**பொதுநிலையினரின் பொறுப்புகளும் உரிமைகளும்**

அருள்வாழ்வு நோக்கத்திற்கு எனத் திருச்சபை சார்ந்த சில பணிகளை நிறைவேற்றத் திருச்சபை அதிகாரிகளால் பொதுநிலையினர் சிறப்பாக அழைக்கப் பெறுவதற்கும் தகுதி பெற்றிருக்கின்றனர். (தி.எண் 33).

திருச்சபைப்பணி (Ecclesiastical Office) என்றால் என்ன என்பதற்கு இரண்டு வகையான இலக்கணங்களை வகுத்துக் கொடுத்தது திருச்சபையின் பழைய சட்டம். விரிவான பொருளில், அருள் வாழ்வு நோக்கத்திற்கென முறைப்படி ஆற்றப்படும் எந்தப் பணியும் திருச்சபைப் பணியாகும். ஆனால், குறுகிய பொருளில் திருச்சபை அலுவல் என்பது இறைவனாலோ அல்லது திருச்சபையாலோ நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். அதனைச் சட்ட முறைப்படி அளிக்க வேண்டும். மேலும் திருப்பட்டத்தில் (Sacredorder) அல்லது திருச்சபையின் ஆட்சி உரிமையில் (Jurisdiction) ஓரளவு பங்கு பெற்று இருக்கவேண்டும் (காண். திருச்சபையின் பழைய சட்டத் தொகுப்பு, தி.ச. 145)

"அருள்வாழ்வு நோக்கத்திற்கென இறைவனாலோஅல்லது திருச்சபையாலோ நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ள எந்த வேலையும் திருச்சபைப் பணியாகும்" (தி.ச. 145)

புதிய சட்டத்தொகுப்போ திருச்சபைப் பணிகளுக்குப் பழைய சட்டம் கொடுத்த இருவிதமான இலக்கணங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை நீக்கிவிட்டது. அத்துடன் திருச்சபைப் பணியைத் திருப்பட்டத்தோடோ அல்லது திருச்சபையின் ஆணை உரிமையோடோ இணைப்பதையும் புதிய சட்டம் தவிர்த்து விட்டது. "அருள்வாழ்வு நோக்கத்திற்கென இறைவனாலோ அல்லது திருச்சபையாலோ நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ள எந்த வேலையும் திருச்சபைப் பணியாகும்" (தி.ச. 145) என்று திருச்சபைப் பணிக்கு ஒரே இலக்கணத்தை வகுத்துக் கொடுத்ததின் மூலம் திருச்சபைப் பணிகளில் பொதுநிலையினரும் பங்குபெறும் வாய்ப்பினைப் புதிய திருச்சபைச் சட்டத் தொகுப்பு உருவாக்கியுள்ளது.

எனவே அருள்பணியாளர்கள் பொதுநிலையினரின் பணிகளை
01. ஏற்றுக் கொள்ளல் வேண்டும் (Acknowledge)
02. ஊக்கப்படுத்த வேண்டும் (Promote)
03. பேணிவளர்க்க வேண்டும் (Foster)

பொதுநிலையினருக்கு அருள்பணியாளர்கள் பணிகளைப் பகிர்ந்து கொடுப்பது என்பது ஏதோ தங்களிடம் குவிந்து கிடக்கும் பணியைப் பகிர்ந்து கொடுப்பதல்ல. மாறாக அது பொதுநிலையினரின் உரிமை என்பதினைக் கருத்தில் கொள்ளவேண்டும். அருள் பணியாளர்களும், பொதுநிலையினரும் இணைந்து செயல்படுவது என்பது இயேசுவின் இறையாட்சிப்பணியில் ஒருமித்த கருத்துடன் செயலாற்றுகிறோம் என்பதன் சிறந்த அடையாளமாகும்.

-பேராசிரியர்.
அ. குழந்தைராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “காலைவேனிலடி”

மாமப் பொடிதூவி
மாயவலை வீசிப்புவி
கர்வம் மிகைகொள்ளும்
காலமிள வேனிலடி

முத்துப் பதித்தவளே - மர
முந்திரி பூத்ததுபார்
சுற்றும் மரக்கிளையில் - தளிர்
சூடிக் குலுங்குதுபார்
கத்துங் குயிலிசையில் - இளங்
காலை புலருது பார் - மண்ணில்
வித்தை புரிந்திடவே - இள
வேனிலும் வந்ததுபார்

தத்தை மரக்கிளையில் - தத்திக்
காதல் புரிகையிலே
கொத்துக் கொத்தாய் மலரை; மரக்
கொண்டை சுமக்குதுபார்
அத்தி மரக்கிளையில் - மந்தி
ஆசைக் களிப்பினிலே
உத்திப் பணிந்தெழுந்து - கூடி
ஊஞ்சலும் ஆடுதுபார்

மாவலி ஓடையெல்லாம் - மஞ்சள்
மதுரப்பூப் படுக்கையடி
பூவலில் ஊறிடும் நீர் - வண்ணம்
பூமகள் வியர்வையடி
தூவிக் கலையழகால் - என்
தூக்கம் கலைப்பவளே
ஆவி எனது வசம் - இல்லை
எங்கதைக் கொய்துவைத்தாய்?

ஓடி மலையருவி - அங்கோர்
ஓவியந் தீட்டுதடி
காட்டுப் பறவையெல்லாம் - தமிழில்
காதல் புரியுதடி
ஏட்டைத் திறந்துமுதே - எழிலை
எங்கும் விதைத்து வைத்தாய்
பாடும் திறனிழந்தே - நானும்
பயித்திய மாகி விட்டேன்

மோகச் சிரிப்பினிலே - மலர்
மூச்சு மணக்கையிலே
மோகத் தீவளர்த்தே - அதில்
மூழ்கிக் கருகும்வண்டு என
வேனிற்கலையழகே - உன்னை
வேண்டிச் சுகித்திடவே
நானிப் புவியினிலே - இன்று
நலமா யில்லையடி

மாந்தளிர் பூப்படையும் - செடி
மல்லிகை பூச்சொரியும்
தேனடை வார்ப்படையும் - விண்ணில்
தெளிநிலா மூப்படையும்
நாற்புறம் பூமியெங்கும் - கன்னி
நாணமும் இளமைதுள்ளும்
போர்ப்பறை ஓய்ந்து மண்ணில் - புதுப்
பொலிவுடன் வேனில் கொஞ்சும்

வரிவரி யாயழகை - அள்ளி
வானந் தெளிக்குதடி
மடிமடி யாய்ப்புதுமை - எங்கும்
மண்ணில் படியுதடி
படிபடி யென்பவளே - உன்னைப்
படித்திடத் திறனிழந்தேன்
செரி செரியாய் மனதில் - நிதமுன்
சொப்பனந் தானடியோ.

அ.ச. பாய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்து சமுத்திரத்தின் முத்து, பசுமையின் உறைவிடம் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்ற இலங்கை மேற்கத்தையவர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதன் பின் உள்நாட்டு யுத்தத்தால் சீரழிந்து சின்னாபின்னமாகி அமைதி இழந்து இருக்கின்றது. அவ்வப்போது ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்களும் இவற்றிற்கு மேலும் வலுச்சேர்க் கின்றன.

உயிர், உடமை, சொத்து இழப்புகளும் இடப்பெயர்வுகளும், அகதி வாழ்க்கையும் அன்றாட நிகழ்வுகளாகியுள்ளன. மீள முடியாத மனித அவலங் களுடன் நாளாந்தவாழ்க்கை ஓடி மறைகின்றது. வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து கண்ணீரும், செந்நீருமாக மனித வாழ்க்கை நகர்கின்றது. கைது செய்தல், காணாமல் போதல், கொலை, கொள்ளை போன்ற மனிதநேயமற்ற நடவடிக்கைகள் சர்வசாதா ரணமாகியுள்ளன.

மக்கள் சொல்லமுடியாத அவலத்துடன் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் உள்ள போராட்டத் தின் இடையில் நிற்கின்றனர்.

கிழக்கிலங்கை, இலங்கைத்தீவிலேயே பன்நெடுங்காலமாக இவ்வாறான அவலங்களிற்கு பெயர்போன பிரதேசம் என்பதைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது. இலங்கை அனர்த்த அழிவுகளில் இருந்து மீள்வதற்குள் மனிதனால் மேற்கொள்ளப் படுகின்ற அவலங்களிற்குள் நாளாந்தம் சிக்கித் தவித்துகொண்டிருக்கின்றது.

சிதைந்த இடங்களையும், சீரழிந்த ஜீவனோபாயத்தையும் சீர்செய்கையில் மீண்டும் ஒரு மனிதஅவலம் நடந்தேறுகிறது. இழந்துபோன உடமைகளையும், தொழிற்றுறைகளையும் எவ்வா றாயினும் பெற்றுக்கொள்ள முடியும். மனித மனங் களில் ஏற்பட்ட காயங்கள் மனவடுக்களாக, உளநோய் களாக பிரதிபலித்துக்கொண்டிருக்கையில் அவற்றை எவ்வாறு கையாள்வது? ஒரு சிறிய தொகையினரின் உதவியுடன் எவ்வாறு இன்றுள்ள உளநலத்தேவை களைப் பூர்த்தி செய்வது ? இன்று எம்மத்தியில் உள்ள பெரிய வினா இதுவாகும்.

இதுவரையில் "தொண்டன்" மாதாந்த சஞ்சிகை ஊடாக சிறிய அளவில் உளநலம் தொடர்பாக எழுதிவந்தேன். காலத்தின் கட்டாய தேவையறிந்து இவ்விடயம் தொடர்பாக ஆழமாக, விளக்கங்களுடன் எழுதுவது பசுபிக் சமுத்திரத்தில் உறைந்து போயுள்ள பனிப்பாறையைப் போன்று வெளித்தெரியாது உள் இருக்கின்ற நோயாளர் களையும் இனங்கண்டு ஆற்றுப்படுத்த உதவும் என நம்புகின்றேன்.

எனது கவலையை தொண்டன் நிர்வாகத் திடம் தெரிவித்த போது மனம் கோணாது ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் உளநலம் தொடர்பான ஆக்கத்திற்குக் கூடுதலான பக்கங்களை ஒதுக்கித் தருவதாக கூறியுள்ளனர். தொண்டன் நிர்வா கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்மொழியில் உளநலம் தொடர்பான வெளியீடுகள் குறைவாக உள்ளதால், தொடர்ந்து வருகின்ற இவ்வாக்கங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடலாம் எனவும் எண்ணியுள்ளேன். எனது முயற்சி தொடர்பாக தங்களது ஆக்கபூர்வ மான ஆலோசனைகளை அன்புடன் எதிர்பார்க்கிறேன்.

**அத்தியாயம் 1**

## உளநோய்கள் தொடர்பான அறிமுகம்
## AN INTRODUCTION TO MENTAL ILLNESS

**1.1 உளநலமும் உளநலக்கோளாறுகளும் :-**

ஆரோக்கியமான உடல்நலமும், உளநல மும் ஒரு மனிதனுக்கு இரு கண்கள் போன்றவை. ஆரோக்கியமான உடல் உள்ளவர்க்கு ஆரோக்கிய மான மனமும் சேர்ந்தே இருக்கும். இது இயற்கை யின் நியதி. சீரான உள ஆரோக்கியம் உள்ள ஒருவராலேயே ஆரோக்கியமாக சிந்திக்க, செயற்பட, பல்வேறு பிரச்சினைகளிற்கும் முகம்கொடுக்க, பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக்கொள்ள, நல்ல உறவை ஏனையவர்களுடன் பேணவும் முடியும். தனது சந்தோசத்தைப் போலவே மற்றவர்களிற்கு சந்தோசத்தைக் கொடுக்கவும், நல்ல நட்புறவை, புரிந்துணர்வை மேற்கொள்ளவும், அவ்வாறான உறவுகளைப் பேணிக் காப்பாற்றவும் முடியும். இவ்வாறான ஆரோக்கியமே உளநலம் என வரையறுக்கப்படுகின்றது. (By Vikram patel)

உடலும், உள்ளமும் வெவ்வேறானவையாக இருந்தபோதும், அவை ஒத்து இயங்குவதாலேயே மனிதவாழ்வு சீராகச் செல்கின்றது. இங்கு ஒன்றில் இருந்து மற்றொன்றை பிரிக்க முடியாது. இது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயத்தின் இரண்டு பக்கங்களிற்கும் ஒப்பானது. இங்கு ஏதாவது ஒருநலன் பாதிக்கப்படும் போது அது மற்றையதையும் பாதிக்கவே செய்யும். "சக்தியின்றிச் சிவமில்லை சிவமின்றிச் சக்தியில்லை" என்ற இந்துமதத் தத்துவம் உடல்நலனுக்கும் உளநலனுக்கும் இடையேயான உறவை விளக்கப் பொருத்தமானது. இங்கு இவ்விரு நலன்களும் சாதாரண பங்கீட்டுவலுப்பிணைப்பு போன்றதல்ல, இவை மின்வலுப்பிணைப்பிற்கு ஒத்தவை.

சாதாரணமாக உடல் எவ்வாறு நோய் நிலைக்கு உட்படுகின்றதோ அவ்வாறே உள்ளமும் நோய்நிலைக்கு உட்படுகின்றது. உடல்நோய்கள் காலத்தோடு குணமாகலாம் அல்லது கட்டுப்படுத்தி வைக்கப்படலாம். அவ்வாறே உளநோய்களிற்கும் தீர்வு அமையும். உளநலன் பாதிக்கப்படும்போது அவை பல்வேறு உளநோய்களாக வெளிப்படுத்தப்படலாம்.

உளநோய்களின் பாதிப்பானது ஒருவரின் உணர்வுகளில், எண்ணங்களில், சிந்தனைகளில், கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களில், ஆன்மீகத்தில், நடத்தைக் கோலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு குறிப்பிட்டவர்களில் சமூகத்திற்கு ஒவ்வாத, எதிர்மறையான அல்லது விலகல் நடத்தைகளும் காணப்படலாம்.

தற்கால விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும் மருத்துவ வசதிகளும், உளநலத்துறை தொடர்பான எழுச்சியும் எவ்வகையான உளநோய் களையும் இலகுவாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க உதவுகின்றது. இவ்வகையான சிகிச்சை களை உளநல வைத்திய நிபுணர்கள், உளநல வைத்தியர்கள் மாத்திரமின்றி சாதாரண சமூக மட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களே வழங்கக் கூடியதாக உள்ளது.

உளநலமும், உளநோய்களும் பெரிய சமுத்திரத்திற்கு ஒப்பிடக்கூடிய ஆழ, அகல, விஸ்தீரணத்தைக் கொண்டவை. இவ்வாறான நிலையில் பொதுவான பொதுசன அபிப்பிராயம், நடத்தை, சிந்தனை, செயற்பாடு ரீதியாக பாரிய மாற்றத்திற்கு உள்ளாகி, வன்முறைக் குணமுடைய பாரிய உளநோய்களால் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமே நோயாளர்கள் என்று கருதி அவர்களை விலக்கப் பட்டவர்கள், வேண்டப்படாதவர்கள் என்ற மனோ பாவத்துடன் அணுகுவதோடு, யாராவது ஒருவர் உளநலனால் பாதிக்கப்பட்டு அது தொடர்பான துறைசார்ந்தவர்களிடம் தொடர்பு கொண்டாலேயே இடுகுறிச் சொற்களுடன் சமூகத்தில் வாழவிடுவதும் இன்றும் "இலைமறை" காயாகவே உள்ளன. பொதுவான உளநோய்களான உளச்சோர்வு, பதகளிப்பு, மெய்ப்பாட்டு வெளிப்பாடுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பலர் இன்றும் உரிய சிகிச்சை முறைகளின்றி அவதிப்படுகின்றனர்.

நீங்கள் ஏன் உளநலம் தொடர்பாக அக்கறை செலுத்தவேண்டும்?

உளநலம் என்பது விரல்விட்டு மற்றவரைச் சுட்டிக்காட்டுகின்ற நிலையல்ல. ஒருவிரல் மற்றவரைக் காட்ட ஏனைய நான்கு விரல்களும் குறித்த நபரை சுட்டிக்காட்டுவது போல் உளநலம் ஒவ்வொருவ ருக்கும் பொதுவான பிரச்சினையாகும்.

### ஏனெனில் அவை எம்மையும் பாதிக்கச் செய்யலாம் :-

இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும், தனது வாழ்க்கைக் காலத்தில் எப்போதாவது ஒருகட்டத்தில் ஏதாவது ஓர் உளநோயால் பாதிக்கப் பட்டிருக்கலாம். இங்கு உளச்சோர்வு நோய் பொதுவாக எல்லோரையும் ஏதாவது ஒரு கட்டத்தில் பாதிப்ப டையச் செய்திருக்கும். அல்லது ஒருவீட்டில் யாராவது சிகிச்சையின்றி இருக்கின்ற உளநோயாளர்கள் இருந்தால் அது எல்லோரது உளநலத்தையுமே கேள்விக்குறியாக்கிவிடும்.

உள்நாட்டுயுத்தம், இயற்கை அனர்த்தங் கள், ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலைகள் காணப் படுகின்ற நாடுகளில் உளநலப்பிரச்சனைகள் பொதுவாகவே காணப்படும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) கணிப்பின்படி 2015 ஆண்டளவில் உலகில் உளநலத்தால் பாதிக்கப்பட்டு நாளாந்தம் சிகிச்சை பெறுபவர்களே, ஏனைய உடல் நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களிலும் அதிகமாகக் காணப்படுவார்கள் எனக் கணித்துள்ளது. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு பல்வேறு வகையான ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

### இவை சாதாரண சமூகத்திற்கு மேலுள்ள சுமைகளாகும் :-

பல்வேறு நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட கணிப்புகளின்படி உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள நாடுகளில் வயது வந்தவர்களில் ஏறத்தாள 40% ஏதாவது ஓர் உளநலக்குறைவுடனேயே வைத்தியர்களை அணுகுகின்றனர். உளநோய்க ளின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்ற அளவில் இத்துறை சார்ந்தவர்களின் எண்ணிக்கையும், நிபு ணத்துவமும், தேவைகளும் இன்னும் அதிகரிக்க வில்லை. மாறுபாடான கண்ணோட்டமும், சமூக வடுவும் இத்துறைக்கு இருக்கின்ற இருபிரதான எதிரி களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் எப்போது வெற்றிகொள்ளப்பட்டு நண்பர்களாகுவார்களோ அன்றே உளநலத்துறையும் பூரண வளர்ச்சியடைய முடியும். உள நலக்குறைவால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் உடல்நலன் குறித்த முறைப்பாடுகளுடனேயே பொது வைத்தியர்களை அணுகுவார்கள். இங்கு உடல் சார்ந்த பிரச்சனைகளை முன்னிலைப் படுத்தியே மருத்துவப் பரிசோதனைகளும், சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிறையப் பணச்செலவு, அலைச்சல் ஏற்பட்டபோதும் பயன் ஏதும் ஏற்படுவதில்லை; நீண்ட காலத்திற்குப் பின்னரே இவ்வாறானவர்கள் உளநலத்துறையை அணுகுவார்கள்.

### இவை பாரிய உள ஊனத்தை உருவாக்கும் :-

பொதுவாக உடல்நோய்களே அங்கவீனத்தை அல்லது ஊனத்தை உருவாக்கும் என்ற எண்ணப்பாடு எம் மக்களிடையே உள்ளது, இருந்த போதும் உளநோய்கள் உளரீதியான ஊனத்தை ஏற்படுத்தி மற்றவர்களில் தங்கி வாழவேண்டிய நிலையை ஏற்படுத்துகின்றது. உளநோய்கள் மரணத்தைக் கூட ஏற்படுத்தலாம். தற்கொலை, கொலை முயற்சி, வீதி விபத்துகள், விபத்துகள் உளநோய்களின் வெளிப்பாடுகள் ஆகும். சிலரில் உடல்நலம், உளநலம் இரண்டும் பாதிக்கப்பட்டிருக்கும், ஆனால் இங்கு உடல் நலனால் பாதிக்கப்பட்டவரின் உளநலக் குறைவு பலமடங்கு அதிகமாகக் காணப்படும். உலகசுகாதார ஸ்தாபனம் 2001இல் வெளியிட்ட தனது அறிக்கையில் உலகில் உள்ள 10 முதல்தர நோய்களில் 4 உளநோய்கள் முன்னிலையில் உள்ளன. இதில் உளச்சோர்வு மிக முக்கியமானது.

### உளநலத்துறையின் சேவை வழங்கல் போதுமானதாக இல்லை :-

தொடர்ந்து செல்கின்ற உள்நாட்டுயுத்தம், இயற்கை அனர்த்தங்கள், அரசியல் சூழ்நிலைகள், விலைவாசி ஏற்றம், வேலைவாய்ப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களால் எமது நாட்டில் உள்ள எல்லா இனமக்களுமே மிகவும் கஷ்டப்படுகின்றனர். இன்றைய நிலையில் உளநலத்துறைக்கான தேவைகள் மிக அதிகமாகவே காணப்படுகின்றன. இத்தேவைகளிற்கு ஏற்ற பிரதான உளநலவைத்திய நிபுணர்களோ, உளநலமருத்துவர்களோ, உளவியற்துறை நிபுணர்களோ இத்துறைசார்ந்த ஏனைய நிபுணத்துவம் வாய்ந்தவர்களோ போதிய அளவில் இல்லை. உளநல வைத்திய நிபுணர்கள் தமது கடமைகளின் போது கூடிய நேரத்தை பாரிய மன நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிடுவதிலேயே செலவிடுகின்றனர். இதனால் மிதமான உள நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளும், சிகிச்சைகளும் தாமதப்படுவதனால் அவற்றினால் பல்வேறு சிக்கல்களும் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் சிக்கல்கள் நீடித்தால் அவை பாரிய உளநோய்களாகக் கூட மாறலாம். உளச்சோர்வு, பதகளிப்பு, மது, போதைவஸ்து, துஷ்பிரயோகம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பலர் உளநலவைத்திய நிபுணர்களை அணுகுவது குறைவு. இவர்கள் வேறுவிதமான சிகிச்சைகளையே நாடிச்செல்வார்கள். சமூகத்தில் சேவையாற்றக்கூடிய உளநலத்துறையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களை இவ்வாறான தேவைகளில் உதவுவதற்கு பயிற்றுவிப்பது காலத்தின் தேவையாகும்.

### சமூகக் கட்டுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள் :-

தற்போது உலகம் போகிறபோக்கில் பல்வேறு நாடுகளில் வாழுகின்ற மக்கள் உலகப் போக்கிற்கு ஏற்ப தமது கலை, கலாசார, பண்பாட்டு, ஆன்மீக நெறிகளில் மாறுதல்களைக் கொண்டுவந்துள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணங்களாக உலகமயமாக்கல், தொழில்நுட்பவிருத்தி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோகம், நகரமயமாக்கல், பல்தேசிய வர்த்தகம், குடிப்பெயர்வுகள், வேலைவாய்ப்பின்மை வன்முறைக் கலாசாரம், பயங்கரவாதம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இக்காரணிகள் உளநலனால் பாதிக்கப்பட்டவர்களில் பல்வேறு விதமாகச் செல்வாக்கு செலுத்துகின்றன.

### உளநோய்கள் சமூகவடுவாக உருவெடுத்துள்ளமை :-

பெரும்பாலான உளநோயாளர்களும், அவர்கள் சார்ந்த குடும்பங்களும் சமூகத்திற்கும் ஏனையவர்களின் ஏளனத்திற்கும் உட்பட வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் உரிய காலத்தில் சிகிச்சை பெறுவதைத் தவிர்க்கின்றனர். அத்துடன் இவ்வாறான துறைசார்ந்தவர்களுடனோ அல்லது உளநலத்துறைக்கோ வருகைதரும்போது அது மாறுபாடான கண்ணோட்டத்துடனேயே நோக்கப்படுகின்றது. இவ்வாறான கண்ணோட்டமும் அதற்கு அச்சப்படுபவர்களுக்கும் சிறப்பான சிகிச்சையளிப்பு முடியாத நிகழ்வாகவே அமையும்.

மனநோய்களைக் குணமாக்க எளிமையான செலவுகுறைந்த சிகிச்சைகள் உள்ளன.

பெரும்பாலான மனநோய்கள் பூரணமாக குணமாக்கப்பட முடியாதவை. இதேபோன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான உடல்நோய்களும் குணமாக்கப்பட முடியாதவை. உதாரணமாக புற்று நோய், சலரோகம், உயர் குருதியமுக்கம், மூட்டுவாதங்கள் போன்ற வற்றைக் குறிப்பிடலாம். இருந்தபோதும் இந்நோய்க ளைக் கட்டுப்பாட்டில் வைத்து நீடித்த ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்வதற்குரிய வழிகாட்டலை மருத்துவவுலகம் காட்டுகின்றது. இதேபோன்றே உளநோய்களில் சிலவற்றையும் பூரணமாகச் சிகிச்சையளித்துக் குணப்படுத்த முடியாதுவிட்டாலும் அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும்.

## உளநோய்களின் வகைகள் (THE TYPES OF MENTAL ILLNESS)

உளநோய்களை இனங்காண்பதற்கு நவீன தொழில்நுட்பங்களோ, சாதனங்களோ, இரத்தப்பரி சோதனைகளோ பெருமளவில் தேவைப்படுவதி ல்லை. இவ்வாறான வசதிகள் உடல்நோய்களை இனங்காண்பதற்கு பூரண உதவி செய்கின்றன. உளநோய்களை இனங்காண்பதற்கு நோய்ச்சரிதையே மிகப்பயனுடையது. நோயாளியின் நெருங்கிய உறவினர்களுடன், நண்பர்கள், அயலவர்கள், சிகிச்சைகான உத்தியோகஸ்தர்களுடன் தொடர்ச்சி யாகத் தகவல்களைப்பெறுவதோடு, நோயாளி வெளிக்காட்டுகின்ற நடத்தைக் கோலங்களின் அடிப்ப டையிலேயே நோய்நிர்ணயம் (DIAGNOSIS) மேற்கொ ள்ளப்படுகின்றது. பெரும்பாலான உடல்நோய்களின் வெளிப்பாடும் உளநோய்கள் போன்றே அமையும். பெரும்பாலான உடல்நோய்கள் உளநோய்களிற்குரிய அறிகுறிகளுடன் வெளிக்காட்டப்படலாம். இங்கு நோய் நிர்ணயம் செய்யும் போது அவை உடல்நோய்களால் ஏற்பட்டவை அல்ல என்ற முடிவிற்குப் பின்னரே உள நோய்கள் குறித்து அவதானம் செலுத்தவேண்டும். ஏனெனில் உளநோய்கள் உடனடியாக உயிராபத்தை ஏற்படுத்துபவையல்ல. ஆனால் மூளை, மூளைமென் சவ்வுகள் தொடர்பாக ஏற்படுகின்ற நோய்த்தொற்று கள், தலையோடு சம்பந்தப்பட்ட காயங்கள் அல்லது தாக்குதல்கள் போன்றன.

அவற்றிற்குரிய நேரத்தில் அணுகாது விட்டால் உயிராபத்தையோ அல்லது நாட்பட்ட ரீதியான உடல் ஊனங்களையோ ஏற்படுத்தலாம்.

உளநோய்களை இனங்காண்பதற்குப் பின்வரும் 5 அறிகுறிகளையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

### 1. உடல் ரீதியான மெய்ப்பாட்டு வெளிப்பாடுகள் (PHYSICAL - "SOMATIC" SYMPTOMS)

உளரீதியாகப் பாதிக்கப்பட்ட ஒருவர் உடல்ரீதியான நோய் அறிகுறிகள் குறித்தே வைத்தியரிடம் முறைப்படுவார். இங்கு குத்து, நோவு, உளைவு, அசதி, வலி போன்ற பல்வேறு சொற்கள் பயன்படுத்தப்படும். அத்தோடு இவை உச்சந் தலையில் இருந்து உள்ளங்கால்வரை குறிப்பிடப் படலாம். இங்கு இவ்வாறான நோயாளர்களை அணுகும் மருத்துவரைச் சார்ந்தவர்கள் மேற்படி நோயாளியின் உளநலம் தொடர்பாகவும் அறிவது நோயாளியின் சிகிச்சையின் வெற்றிக்கு வழிவகுக்கும். அவ்வாறு தவறவிடப்படும் போது நோயாளி சிகிச்சைக் (தனியார், அரச) களங்களை பலசரக்குக் கடைபோல் அடிக்கடி மாற்றிமாற்றிப் பாவிப்பதோடு பெருந்தொகைப் பணத்தையும் செலவிடவேண்டிவரும். எனவே வைத்தியத்துறையில் ஈடுபடுகின்ற சகலதரப்பினரும் தற்போதைய காலச்சூழ்நிலை உணர்ந்து உளநலத் துறை தொடர்பான தெளிந்த அறிவைப் பெற்றுக் கொள்வது உளநலமேம்பாட்டிற்கு பாரிய உதவியாக இருக்கும்.

### 2. உணர்வு ரீதியான வெளிப்பாடுகள் (EMOTIONAL SYMPTOMS)

உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதும், கட்டுப்படுத்துவதும் மிக முக்கியமானது. கவலை, துக்கம், பயம், கோபம், அந்தரம், திடுக்கிடுதல், அமைதி இழந்திருத்தல், சண்டைபிடித்தல் போன் றவை ஒருவரில் அநாவசியமாகக் காணப்பட்டால் அவரை ஆழமாக ஆராய்வது அவசியமானது. இங்கு புறக்கணிக்கும்போது அவை நாளடைவில் பாரிய உளநோய்களாகக் கூட வெளிக்காட்டப்படலாம்.

### 3. நடத்தை ரீதியான வெளிப்பாடுகள் (behaving - behavioural symptoms)

நடத்தை, நடத்தைக் கோலங்கள் ஒருவரின் உள ஆரோக்கியத்தைப் பிரதிபலிக்கும் விம்பங்க ளாகும். வன்முறை கலந்த வெளிப்பாடும், ஒதுங்கியி ருத்தல், தனிமையில் இருத்தல், தன்பாட்டில் சிரித்தல், கதைத்தல், தற்கொலை எண்ணங்கள் போன் றவை குறித்து மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும்.

-தொடரும்-

-DR. ஜூடி ஜெயக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*R.* ஸ்ரான்லி பிரபாகரன்

கலைகள் மனதை இதமாக்குகின்றன என்பது பொதுவான கருத்து. ஆய்வறிவின் அடிப்படையில் நாம் இக்கருத்தைக் கூறுவது குறைவுதான். கலை இன்பம் நுகர்ந்த பின்னர் அவை மனதைத் தொட்டு விடுவதுண்டு, வேதனையை ஆற்றி விடுவதுண்டு, ஏன் உறைந்து கிடக்கும் வேதனையான நினைவுகளைத் தூண்டி விடுவதுமுண்டு. இத்தகைய கூற்றுக்கள் எமது கலையனுபவத்தின் விளைவாகப் பிறந்தவை. ஆனால், இத்தகைய உணர்வுகளை நாம் உளவியல் பின்னணியிலும் நோக்க முடியும். கலை ஆற்றுகையில் பிரதானமாக இரு சாரார் பங்கெடுக்கின்றனர். ஆற்றுவோராகிய கலைஞர்கள் ஆற்றுகையை நுகர்வோராகிய சுவைஞர்கள் ஆகியோரே இவ்விருசாராரும். இவ்விருவரிடமும் உளத்தாக்கங்கள் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

இம்முறை பிரசுரத்துக்குரிய கட்டுரையானது "சுவாமி விபுலானந்தர் இசைநடனக்கல்லூரி, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கருத்தரங்கொன்றில் வாசிக்கப்பட்ட கட்டுரையாகும். கட்டுரையாசிரியர் சிறுவர்கள் சிலரைத் தெரிவு செய்து, அவர்களுக்குப் பரத நாட்டியத்தைக் கற்பித்து, அவர்களிடம் ஏற்பட்ட நடத்தை, மனநிலை மாற்றங்களை அவதானித்து, "நாடகக் கலையானது உணர்வுகளிலும், மனப்பாங்கிலும் மாற்றங்களைக் கொண்டுவர வல்லது" என்னும் கருத்தினைத் தெரிவிக்கின்றார். மனிதனின் மன நிலையைச் சீராக்கி, சமூகத்தை நிதானப்படுத்துவதற்காக பல முயற்சிகளும் இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் கலையினூடான முயற்சியும். எனவே, ஏதோ ஒரு வழியில் எம்மை ஈடுபடுத்தி மனநலம் காப்போம்.

## மன அழுத்தத்திற்குள்ளான சிறுவர்களின் உள வளர்ச்சிக்கு நடனத்தின் பங்களிப்பு

உளநிலையில் கூடுதலான தாக்கத்தைப் பெறுபவர்கள் சிறுவர்களே எனலாம். ஏனென்றால், சிறுவர்கள் அதிக சக்தியற்றவர்களாகவும், பிறரைச் சார்ந்து வாழ்பவர்களாகவும், சுயமாகச் சிந்தித்து மற்றவர்களுடன் சேர்ந்து வாழத் தெரியாதவர்களாகவும், அனுபவம் குறைந்தவர்களாகவும், அச்சம் உடையவர்களாகவும் காணப்படுகின்றார்கள். சிறுவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவையாவன: உரிய வயதில் கல்வி கிடைக்காமை, பாடசாலையில் பாகுபாடு பார்த்தல், சிறு வயதில் தொழிலுக்கு அமர்த்தப்படல், யுத்தத்தினால் அங்கவீனராகுதல், சிறு வயதில் பொறுப்புக்கள் திணிக்கப்படல், துஷ்பிரயோகத்துக்குள்ளாதல், வறுமை, பெற்றோரை இழந்து அனாதையாக்கப்படல், குடும்பப் பிரச்சினைகள், பிறக்கும்போதே சில குறைபாடுகளுடன் பிறத்தல், பெற்றோர் மற்றவர்முன் பிள்ளைகளைக் குறை கூறல், பிள்ளைகள் சமூகமயமாக்கப்படாமை, அடிக்கடி வசிப்பிடங்களை மாற்றுதல், சரியான நண்பர்கள் கிடைக்காமை. இவ்வாறான பிரச்சினைகளினால் சிறுவர்களின் உளநிலைப் பாதிப்பிற்கு உள்ளாகிறது. தற்காலத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி போர் அனர்த்தங்கள் காரணமாகவே சிறுவர்கள் பலர் உளநிலை பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவருகிறது.

இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சிறுவர்கள் உளவளர்ச்சியில் பல சிக்கல்களை எதிர் நோக்குகின்றார்கள். இவர்களின் மன அழுத்த வெளிப்பாடாக அவர்களின் பொதுவான குணங்களில் மாற்றம் ஏற்படுகிறது. அதிக பயம், வெறுப்பு, மூர்க்கம், பிடிவாதம், கோபம், சோகம், திடுக்கிடுதல், களியாட்டங்களில் விருப்பமின்மை, அடிக்கடி சிந்தித்தபடி காணப்படுதல், மாறுபட்ட சிந்தனைகள், நித்திரையில் பயம் ஏற்படுதல், எப்போதும் தனிமையை நாடுதல், உடல் மெலிந்து காணப்படுதல், எப்பொருளிலும் விருப்பமின்மை, பிறருடன் சேராமல் ஒதுங்கியிருத்தல் போன்றவை உள நிலைத் தாக்கங்களினால் ஏற்படும் வெளிப்பாடுகளாகும்.

சிறுவர்கள் தம்மால் உணரப்படாமலேயே இத் தாக்கங்களிற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவர்களது உள வளர்ச்சியானது அவ்வப்பருவத்திற்கேற்ப விருத்தியடைந்து கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் உளநிலை பாதிப்படைவதனால் சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கையே ஸ்தம்பித நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. உளநிலைப் பாதிப்பால் தாக்கங்கள் ஏற்படுவது மட்டுமன்றி அவர்களிற்கு நோய் அறிகுறிகளும் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிக்கடி மயக்கம் வருதல், நெஞ்சுப் படபடப்பு, நடுக்கம், நரம்புத் தளர்ச்சி, மூச்சுவிடக் கஷ்டப்படுதல், கைகால் இழுப்பு, நெஞ்சடைப்பு, கைகால் விறைப்பு, தலையிடி, தொண்டையடைப்பு, தசையிறுக்கம் போன்ற பல நோய்கள். ஏற்படலாம். இவ்வாறான தாக்கங்களிற்கு சிறுவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கொண்டு செல்லப்படுவர்.

இவ்வாறான உள நிலை பாதிக்கப்பட்ட சிறுவர்களைக் குணப்படுத்தும் மருந்தாக பல கலைகள், விளையாட்டுக்கள் போன்றன காணப்படுகின்றன. உதாரணமாக நடனம், சங்கீதம், கவிதை, மேளதாளங்கள், கைப்பணிப் பொருட்கள் செய்தல், தோட்டம் செய்தல், பொம்மைகள் செய்தல், நாடகம், பாடல்கள் எழுதுதல், சிற்ப வேலைகள், மரவேலை, ஆற்றுகை, உளரீதியான விளையாட்டுக்கள் இவைகளின் மூலம் உளநிலைப் பாதிப்பை முற்றாகக் குணப்படுத்தாவிட்டாலும் சிறிதளவேனும் குணப்படுத்த முடியும்.

மேற்குறிப்பிட்ட கலைகளில் நடனக் கலையை நோக்கின் சிறுவர்களிற்கு ஆரம்பத்தில் உடல் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான உடற்பயிற்சிகள் மூலம் குருதி ஓட்டம் சீராக்கப்பட்டு உடலில் உற்சாக நிலையை அடைகின்றார்கள். மனம் ஒரு நிலைப் படுத்தப்பட்டு எந்த வேலையிலும் உற்சாகத்துடனும், மன விருப்பத்துடனும் ஈடுபட வழி ஏற்படுகிறது. அத்துடன் நடனத்திற்குரிய சிறு அடவுகளும் நடன நிலைகளும், அபிநயங்களும் கற்பித்துக் கொடுக்கப் படுகின்றன. இவற்றைவிட கிராமிய நடனங்களான கும்மி, கோலாட்டம், கூத்து, கரகம், காவடி, செம்பு நடனம் போன்ற நடனங்களும் உதவுகின்றன. உதாரணமாக மிருகக்காட்சிச்சாலையில் உள்ள மிருகங்களைப்போல உடையணிந்து அபிநயித்து ஆடிக் காட்டல், குறவன், குறத்தி குறி சொல்லுதல் போன்ற காட்சிகளை அபிநயம் மூலம் வெளிப்படுத்துதல், வேடுவ நடனங்கள், உவமான உவமேயக் கதைகள், ஆமையும் முயலும் போன்ற கதைகளை அபிநயித்துக் காட்டல் இவ்வாறாக பல நடனங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இவ்வாறான நடனங்களின் மூலம் மன அழுத்தத்திற்கு உள்ளான சிறுவர்கள் மனக் கவலையிலிருந்து விடுபட நடனம் ஒரு மருந்தாக அமைகின்றது. குழுக்களாகச் சேர்ந்து நடனம் ஆடுவதனால் சிறுவர்கள் தனிமையை மறந்து மற்றவர் களுடன் சேர்ந்து செயற்படும்போது கவலையை மறந்து பயமின்றி செயற்படுவார்கள். இதன் மூலம் இவர்களுக்குள் உள்ள வெறுப்பு, மூர்க்கக் குணங்கள், சலிப்புத் தன்மைகள், திடுக்கிடுதல் போன்ற குணங்கள் நீக்கப்படும். பலர் ஒன்றாகச் சேர்ந்து குழுக்களாக இயங்கும் போது சிறுவர்களுக்கிடையே நட்புறவு, சகோதரத்துவம் ஏற்படும். இதன்மூலம் தமது துயரங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து உரையாட சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறது. இதனால் அவர்களது தனிமை நீங்கி, வேண்டாத சிந்தனைகளும் அகன்று, பிரிவுத்துயர் மறைய வழி பிறக்கிறது. கை, கால்களை அசைத்து அபிநயங்கள் செய்வதனால் உடலுறுப்புக்கள் ஒழுங்காக இயங்கி நோய்கள் குணமாகும். எதிலும் ஆர்வமும், சந்தோஷமும் காணப்படும். சிறுவர்களைப் பின்தங்கிய நிலையில் இருந்து முதன்மை யான ஒரு நிலைக்குக் கொண்டு வர முடியும். தன்னால் எந்தவொரு காரியத்தையும் செய்யமுடியுமென்ற மனத்துணிவும் ஏற்பட்டு கல்வியிலும் அவர்கள் திறமையாகச் செயற்பட நடனம் உதவுகிறது. கூட்டாகச் செயற்படுவதனால் அவர்களுக்குள் ஒற்றுமை நிலவும். பெற்றோர் பாதுகாப்பில் அல்லது உறவினர் பாதுகாப்பில் வளரும் உளநிலை பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலைகளில் நடனம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதனால், அம்மாணவர்கள் உளரீதியாக நன்மை அடைவார்கள்.

மட்டக்களப்பினை எடுத்துக் கொண்டால் போரின் வடுக்களைச் சுமந்து கொண்டும் வேறு விதமான தாக்கங்களினால் உளநிலை பாதிக்கப்பட்டும் உள்ள சிறுவர்களை வழிப்படுத்தும் - குணப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் வண்ணத்துப்பூச்சி சமாதானப் பூங்காவைக் குறிப்பிடலாம். அங்கு கலைகளில் ஒன்றான நடனம் பயன்படுமாற்றினை நோக்கலாம்.

வண்ணத்துப்பூச்சி சமாதானப் பூங்காவானது குழந்தைகளின் உளத் தேவையில் கவனம் செலுத்தி அவர்களினூடாகவே, அவர்களது உள்ளக்கிடக்கைகளையும், திறமைகளையும் வெளிக்கொணர்ந்து எதிர்காலத்தில் அவர்களுக்குப் பிரகாசமான வழியைக் காட்டி, நற்பிரஜையாக அவர்களை உருவாக்கத் தன்னையே அர்ப்பணித்துள்ளது. இங்கு நடனம், படைப்புக்களின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாரத்துக்கு ஒரு தடவை பூங்காவிற்கு வரும் சிறுவர்களைக் குழுக்களாகப் பிரித்து பல்வேறு விதமான நடனங்களைக் கற்பிக்கின்றனர். ஒவ்வொரு கிழமையும் நடனப் பயிற்சிக்கான கால எல்லை முடிந்ததும் நடன நிகழ்ச்சிகள் மற்றைய நிகழ்ச்சிகளுடன் இணைத்து அரங்கேற்றம் செய்யப்படும்.

இவற்றையெல்லாம் நாம் தொகுத்து நோக்கும் போது மன அழுத்தத்திற்குள்ளான சிறுவர்களின் உள வளர்ச்சிக்குக் கலைகளுள் ஒன்றான நடனம் மிகப் பிரதானச் செயற்பாடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாயின் இதற்கான சக்தி மிகவும் வலிமையானதாகும். இக் கலையை செய்முறை, கோட்பாடு, சமயச்சார்பு, சமூகத் தொடர்பு, மனோதத்துவம் போன்ற பல கோணங்களிலிருந்தும் ஆராயலாம்.

பாரத கலாசாரத்தின் சூடாமணியாக ஒளி வீசுவது நாட்டியக்கலையே. இது காலத்தால் மூப்படைந்த இளமை குன்றாத சிறப்புத்தன்மை வாய்ந்தது. இத்தகைய பெருமை பெற்ற பரதக்கலையினைக் கற்பதனால் மனிதன் மிகவும் பக்குவத்தன்மை கொண்டவனாக மாறிவிடுகின்றான். இந் நடனத்தைக் கற்ற பின்னர் இவர்களது மனநிலை வேறுபட்டுக் காணப்படுகிறது. மகிழ்ச்சியாக இருப்பதுடன் தன்னுடைய ஆற்றல் வெளிப்படுவதைக் காண்கின்றனர். தன்னால் முடியுமென்ற எண்ணத்துடன் கல்வி கற்றல், கோபமின்றி பொறுமையைக் கடைப்பிடித்தல், பெரியோரை மதித்து அமைதியாகப் பேசுதல் ஆகியவற்றைப் பழகிக் கொண்டு உள்ளனர். கூடிச் செயற்படுவதனால் இனமத வேறுபாடின்றி ஒற்றுமையாகச் செயற்படுதல், குரு, தெய்வம், பெற்றோருடன் பக்தியுடன் பழகுதல், சுய மதிப்பை அதிகரித்தல், வருங்காலம் பற்றிச் சிந்தித்தல் போன்ற மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய மாற்றங்கள் நடனப்பயிற்சிகளாலும், நடன அளிக்கைகளாலும், நடன வடிவங்களை அமைத்துக் கொண்டதனாலும் அடையப் பெற்றனவாக உள்ளன.

திருமதி. கி. ஷர்மிளா றஞ்சித்குமார்
விரிவுரையாளர் (நடனம்)
சுவாமி விபுலாநந்தர் அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக் கழகம்.

## போர்க்களத்தில் என் செபம் கேட்டு...



போராடும் உலகினில் நான் வாழ்கிறேன் - அந்தப்
போர்க்குணம் என்னில் இல்லையையா - இருந்தும்
போராடிப் போராடி ஜெயிக்கிறேன் - உன்னோடு
போர் முனையில் என்னாயுதம் செபமப்பா

செபத்திற்குப் பலன் கண்டேன்
செபத்தினால் வெற்றி கண்டேன்
செபத்தினால் எல்லாம் முடியும்
உம் சித்தம் நிறைவேறட்டும்
என்று செபிக்கும்போது.

என் பலம் கண்டேன், பலவீனம் உணர்ந்தேன்
போர்முனையில் முகம் கொடுக்கும் போது
உண்மை நண்பர் கண்டேன்,
உடனுழைப்போர் அறிந்தேன்
நெருக்கடி நேரம் நெருங்கும் போது.

செபத்திற்குப் பலன் கண்டேன்,
செபத்தினால் வெற்றி கண்டேன்
செபத்தினால் எல்லாம் முடியும்;
உம் சித்தம் நிறைவேறட்டும்
என்று செபிக்கும் போது.

போராடாது வெற்றி கிடைக்கவில்லை - தினம்
உழைக்காமல் ஒன்றும் கைகூடவில்லை
இறுதிவரை உன்னைப் பற்றிப் பிடிக்காமல்,
உறுதியாய் எனக்கெதுவும் கிடைத்ததில்லை.

செபத்திற்குப் பலன் கண்டேன்,
செபத்தினால் வெற்றி கண்டேன்
செபத்தினால் எல்லாம் முடியும்;
உம் சித்தம் நிறைவேறட்டும்
என்று செபிக்கும் போது.

நேசரே என்னை நீர் தெரிந்தீரய்யா-என்
தகப்பனே அபிஷேகம் செய்தீரய்யா
இறைவனே என்னை நீர் புடமிடுகிறீர்-என்
தலைவரே என்னை நீர் உறுதிசெய்கிறீர்

செபத்திற்குப் பலன் கண்டேன்,
செபத்தினால் வெற்றி கண்டேன்
செபத்தினால் எல்லாம் முடியும்
உம் சித்தம் நிறைவேறட்டும்
என்று செபிக்கும் போது.

-ஷா(ஜ)கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பற்பல கத்தோலிக்கப் பக்தி முயற்சிகள்

✦ கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்திக் கொள்ள, திருவழிபாட்டின் பிரதான வழிபாட்டு முறைகள் தவிர்ந்த வேறு செபவழிபாடு களும், பக்தி முயற்சிகளும் உள்ளன. அவை புனிதர்களின் பக்தியுடன் தொடர்புபட்டுள்ளன. அனைத்தும் திருவழிபாடுகள் என்று அழைக்கப் படுகின்றன. ஆதியிலிருந்து இன்று வரை பக்தி முயற்சிகள் வளர்ந்து வருகின்றன. பழைய ஏற்பாட்டுத் திருப்பாடல்கள் மூலம் நாமிதனை அறியமுடிகிறது.

✦ இறை - மனித தொடர்பை வளர்த்துக்கொள்ள உதவும் பக்தி முயற்சிகளில் திருமணித்தியாலம், நற்கருணை ஆராதனை, சிலுவைப் பாதை, ஒப்பாரி பாடுதல், நவநாள் செய் தல், மெழுகுவர்த்தி ஏற்றுதல், மாலையாராதனை, ஊர்வலம், திரு யாத்திரை செல்லுதல், விவிலிய வழிபாடு, செபமாலைப்பக்தி என்பன எடுத்துக் காட்டக் கூடியவை. இவற்றைக் கருத்துள்ள முறையில் தொடர்ந்து செய்ய மோட்சபாதை, சிலுவைப் பாதை, திருக்குடும்பப் பக்திமாலை, தேவ அன்னையின் பக்தி நூல்கள் போன்றவற்றைத் திருச்சபை எமக்குத் தந்துள்ளது.

*** பக்தி முயற்சிகளில் ஈடுபட வேண்டி யதன் அவசியம்:**

இறைமக்களின் பொதுவழி பாட்டு முயற்சிகளுக்கு மேலதிகமாக பக்தி முயற்சிகளுமுண்டு. இவற்றிலி ருந்து உயர்மட்ட நன்மைகளைப் பெறத் தேவையான வழிமுறை களைக் கையாள வேண்டும். மக்கள் தனியாகவும், குழுவாகவும் பங்கு கொள்ள வழிநடத்த வேண்டும். இவற்றுக்கான ஆயத்தங்களையும் செய்யப் பழக்கவேண்டும்.

கிறிஸ்துவோடு இணையச் செய்யும் பக்தி முயற்சிகளில் அவர் இறைவனுடன் வைத்திருந்த அன்பும், விசுவாசமும் அவருக்கேற்பட்ட எவ் வித சவால்களுக்கு மத்தியிலும் குறைவுபடாதிருந்தது போல, எம் வாழ்விலும் இவை குறைவுபடா திருக்க நாம் செபித்தல் வேண்டும்.

தேவ அன்னைக்கு நடத் தப்படும் பாத்திமா அன்னை, லூர்து அன்னை, வியாகுல அன்னை, சதா சகாய அன்னை, செபமாலை அன்னை ஆகிய பக்தி முயற்சிகளின்போது அன்னை மரியாவிடமிருந்த ஆழமான விசுவாசத்தையும், எதிர்பார்ப்பையும், எம் வாழ்விலும் விருத்திசெய்யத் தேவையான வரத்தையும், சக்தி யையும் கேட்டுச் செபித்தல் வேண்டும். அத்துடன் துன்புறுவோர் மட்டில் எவ்வேளையும் அவரது கருணையும், இரக்கமும் இருந்ததுபோல, நாமும் துன்புறுவோருக்கு உதவியாக இருக்க அவரது அருளைக் கேட்டுச் செபிக்க வேண்டும்.

புனிதர்களின் திருவிழாக் கள் மூலம் நாம் புதுவாழ்வுக்குக் கடந்து செல்லவேண்டும். அதன் மூலம் நாம் ஒரு சுதந்திர மகிழ்வை அனுபவிக்கலாம். அடிமை விலங்கை உடைத்தெறியவும், பாவத்தை வெறுத்துப் புனிதமான வாழ்வு வாழவும் இத் திருவிழாக்கள் உதவும். இந்தப் புனிதர்களை மதித்து, அவர்களின் வாழ்வைப் பற்றிச் சிந்தித்துப் பின்பற்றி வாழவும், அவர்களின் மத்தியஸ்தத் தின் வழியாக நன்மைகள் பலவற்றை இறைவனிடமிருந்து அருள் வரங்களாகப் பெற்றுக் கொள்ளவும் இத்திருவிழாக்கள் வழிவகுக்கின் றன.

**✦ பிள்ளைகளின் பக்தி முயற்சிகள்:**

பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வை விருத்தி செய்யும் நோக்கு டன் திருச்சபையால் அங்கீகரிக்கப் பட்ட வழிகளுள் பக்தி முயற்சிகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மூவேளைச் செபங்கள், திருமணித்தி யாலம், தியானம், நவநாள், சிலுவைப் பாதை, செபமாலை ஆகியனவே இவை. இறையுறவை இவை விருத்தி செய்ய உதவுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் வருமாறு:

1) ஒன்றிணைந்து பக்தியுடன் வழிபாடுகளில் பங்குபற்றுதல்.
2) செபத்தின் மூலம் மனதை ஒரு நிலைப்படுத்தி அவதானமாகச் செபித் தலும், உச்சரித்தலும்.
3) பொது மன்றாட்டுகளிலும், பாடல்க ளிலும் பங்குபற்றுதல்.
4) தனிப்பட்ட முறையில் செபிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது மனந் திறந்து இறைதந்தையிடம் செபித்தல்.
5) செபத்தின் மூலம் பெறும் அனுபவங் களுக்கேற்ப வாழ்வை மாற்றியமைக் கக் கைகொடுத்தல்.

இவ்வாறு சிறுபராயந்தொட்டு ஆன்மீக வாழ்வு வாழவும் செபிக்கவும் திருச்சபை பல்வேறு வழிகளில் முயன்று வருகிறது.

**✦ இலகுவான தியானத்துக்கு வழிகாட்டல்:**

1) மூச்செடுக்கும் பயிற்சி:

நன்றாக மூச்சை உள்வாங்கி வெளிவிடுதல், 2 அல்லது 3 தடவை கள் இவ்வாறு செய்யவும்.

2) எழுந்திருங்கள்:

சுவாசப்பைகளுள் செல்லும் தூய காற்றினூடாக இறைசக்தியைத் தம்முள் உணரமுடியும். மூச்சை இழுத்து வெளிவிடும் போது அசுத்தக் காற்றுடன் கெட்ட குணங் களும், சிந்தனைகளும் வெளியேறு மென உணருங்கள்.

3) கவனத்தைச் செலுத்துங்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்கவனத்தையும் உட்சுவாசத்துக்கும், வெளிச்சுவாசத்துக்கும் ஒதுக்குங்கள். சுற்றுப் புறத்தை மறந்துவிட்டுச் செயற்படுங்கள்.

4) இறைவார்த்தைக்குச் செவி மடுங்கள்:

மனம் அமைதியான பின் இறைவார்த்தையை 2 அல்லது 3 முறை வாசித்துச் செவிமடுங்கள்.

5) தியானத்தில் மனதைச் செலுத்துங்கள்:

வாசித்த இறைவார்த்தையை இதயத்தில் செயற்பட இடமளிக்குக! மனதைத் தொட்ட பகுதிகளைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க! அப்பகுதி உமது இதயத்தில் ஆழமாகப் பதிய இடந்தருக! மௌனமாக அப்பகுதியைப் பலமுறை உச்சரிக்க! அப்பகுதி ஏன் தொட்டது எனச் சிந்திக்க!

- அதனூடாக இறைவன் உமக்குத் தரும் செய்தி என்ன?
- அதனூடாக இறைவன் உம்மிடம் கேட்பது என்ன?
- உமக்குத் தரும் வாக்குறுதி என்ன?

6) அனுபவத்தைப் பகிருங்கள்:

அனைவரும் தியானத்தின் போது கிடைத்த, மனதில் தொட்ட பகுதியைப் பகிர்தற்கு சந்தர்ப்பம் வழங்குக!

7) செய்தியினூடே வாழுங்கள்:

இத்தியானத்தில் பெற்றுக் கொண்ட இறைவார்த்தைப் படி வாழத் திட்டமிடுக.

இவ்வாறான தியானத்திற்குக் காலத்தை ஒதுக்குவது பயன்மிக்கது. எமது இதயத்தில் இறைவன் தரும் செய்திக்கு இடமளிப்பது மிக அவசியம். அப்போது மிகுதியை இறைவன் அருள்வார் என நம்புவோம். மாணவர்களாகிய எம் ஆன்மீக வாழ்வை வளர்க்க முயல்வோம்.

– மெற்றில்டா –



# வத்திக்கானின் இலங்கைக்கான தூதர்

## மட்டக்களப்பு விஜயம்

வத்திக்கானின் இலங்கைக்கான தூதர் பேரருள் திரு. மாறியோ செனாரி ஆண்டகை கடந்த ஏப்ரல் மாதம் 22ம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட தீவிர இராணுவ நடவடிக்கைகள் காரணமாக நூறாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக அல்லல்படுகின்ற சூழ்நிலையில் திருப்பீடத் தூதரின் விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மற்றும் குருக்கள் ஆகியோரால் வரவேற்கப்பட்ட திருப்பீடத் தூதர் மறைமாவட்ட ஆயர், கிழக்கு மனித பொருளாதார அபிவிருத்தி நிலைய இயக்குனர், உத்தியோகத்தர் மற்றும் ஏனையவர்களுடன் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்குச் சென்று மக்களின் துன்ப துயரங்களைக் கேட்டறிந்தார். இவ்வாறு பாலமீன் மடு, மட்.சிங்கள மகாவித்தியாலயம், வாகரை, கதிரவெளி, மகிலூர், முறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களிலுள்ள முகாம்களைப் பார்வையிட்டதோடு, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ள திராய்மடுவுக்கும் சென்று மக்களைச் சந்தித்தார். இன்னும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆரையம்பதியில் உருவாக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தையும் திறந்து வைத்தார். மட்டக்களப்பில் சர்வமதத்தலைவர்களையும் மற்றும் கத்தோலிக்கக் குருக்களையும் சந்தித்து உரையாடினார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்த அவர் இங்குள்ள நிலைமையினை தாம் திருத்தந்தையின் கவனத்துக்குக் கொண்டு வருவதாகவும், அனைவருக்காகவும் தாம் இறைவனிடம் செபிப்பதாகவும் கூறினார். பாதிக்கப்பட்ட மக்கள் என்ன கூறுகிறார்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்ட போது, "தாம் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் சென்று குடியேறி தமது தொழில்களைச் செய்து அமைதியாக வாழவே விரும்புகிறார்கள்" என்று கூறினார்.

வத்திக்கான் திருப்பீடத் தூதர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த காலப்பகுதியில் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ச அவர்கள் திருத்தந்தையைச் சந்திக்க இத்தாலிக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பேரினவாதமும் பிளவுபட்ட தேசியவாதமும் (கி.பி. 1921 - கி.பி. 2005)

தேசிய அரசியலைப்பற்றி ஆராய்கின்ற ஒவ்வொரு ஆய்வாளனுக்கும் 'தேசியவாதம்' பற்றிய விளக்கம் அவசியமானதொன்றாகும். அந்தவகையில் தேசியவாதம் என்றால் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. இந்த இடத்தில் கான்ஸ்கோன் என்ற ஆய்வாளனின் கருத்தினை நோக்குவது பொருத்தமானதாகும். "தனி மனிதனின் மேலான விசுவாசம் தேசியஅரசுக்கு வழங்கப்படுவதே தேசியவாதம்" என்பதே அவரது கருத்து. அதாவது ஒவ்வொரு மனிதனும் தமது அதிகபட்ச உயர்வான பற்றினைத் தாய் நாட்டின் மீது செலுத்துவதே தேசியவாதம் என நாம் வியாக்கியானப் படுத்தமுடியும்.


தேசியவாதத்தினை விளங்கிக் கொண்ட நாம், எமது நாடான இலங்கையில் தேசியவாதத்தின் நிலை எப்படி அமைந்துள்ளது என்பதை ஆராய்வோம். இன்றைய இலங்கைத் தேசியவாதமானது தேசப்பற்றுடன் கூடிய நிலையில் இருந்து விலகி, பிளவுபட்ட இனத் தேசியவாதங்களாகக் கூர்மையடைந்துள்ளமையைக் காணமுடிகின்றது. மொழியடிப்படையில் பார்க்கின்றபோது சிங்களத் தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம் என்ற பிளவுநிலையைக் காணலாம். தேசப்பற்றுமிக்க தேசியவாதமானது அதில் இருந்து விலகி சிங்கள, தமிழ் தேசியவாதங்களாக 1921 இல் இருந்து பிளவுபட ஆரம்பித்தது. இன்றைய நிலையில், தமிழ் மொழித்தேசியவாதத்தினுள் இரண்டு இனத் தேசியவாதங்களை அவாதனிக்கக் கூடியதாகவுள்ளது. "இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்ற வகையில், தமிழ்த் தேசியவாதத்தினுள் இஸ்லாமியத் தேசியவாதத்தினை சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அடையாளப்படுத்த விரும்புகின்றனர். குறிப்பாக, இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 1987களின் பின்னர். எம்.எச்.எம். அஸ்ரப் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் எழுச்சியுடன் இஸ்லாமியத் தேசியவாதம் தம்மை அடையாளப்படுத்தியது எனலாம். இருந்தாலும், கூடிய முரண்பாட்டிற்குரியதும் - முனைப்படைந்ததும் போராடிக்கொண்டிருப்பதுமான தேசியவாதங்களாக சிங்கள - தமிழ்த் தேசியவாதங்களையே குறிப்பிடலாம். இன்றைய அரசியல் செல்நெறிகளில் அவற்றை துலாம்பரமாகக் காணமுடியும்.

இலங்கைத் தேசியவாத உணர்வு வரலாற்று ரீதியாக சிங்கள, தமிழ்த் தேசியவாதங்களாக எவ்வாறு பிளவடைந்தது? அவை கி.பி. 1921 இல் இருந்து 2005வரை சிங்களப் பேரினவாதிகளால் எவ்வாறு வளர்க்கப்பட்டு வருகின்றது? ஒவ்வொரு கால கட்டத்திலும் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை? என்பதை இனி ஆராய்வோம். இதனை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு எளிமையான கோட்டுப்படத்தினைப் பயன் படுத்த முடியும். சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பிரிவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல், தாய் நாட்டுப்பற்றுடன் இருந்த தேசியவாதம், இன மொழித் தேசியவாதங்களாக எவ்வாறு பிளவடைந்தது? அதற்கான காரணிகள், விளக்கம் என்பவற்றையும் நோக்குவோம்...




* E - L : சமஷ்டிவாதம்
* L - U : தமிழீழத்தேசியவாதம்

விளக்கக் குறிப்புகள் :

01. A1, A2, A3 (1870 - 1915) : பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான பௌத்த, இந்து, இஸ்லாமிய மத இயக்கங்கள், இனரீதியான அமைப்புகள்.

02. B (1919) : இலங்கைத் தேசியகாங்கிரஸ்: சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியச் சின்னம்.

03. C (1920) : பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிரான இலங்கைத் தேசிய காங்கிரசை உடைப்பதற்குத் தேசாதிபதி "வில்லியம் மனிங்" மேற்கொண்ட சூழ்ச்சி.

04. $DD_1$ (1921) : தேசாதிபதியின் பிரித்தாளும் சதி வெற்றி - சிங்கள தமிழ்த் தலைவர்களிடையே முரண்பாடு - தமிழ் மகாசபையின் தோற்றம் - இனப்பிரச்சினையின் ஆரம்பம்.

05. $EE_1$ (1948,1949) : ஐ.தே. அரசாங்கத்தின் பிரசாவுரிமைச் சட்டம். பாராளுமன்றத்தேர்தல் திருத்தச் சட்டம். இந்திய வம்சாவழியினரின் குடியுரிமை, வாக்குரிமைப் பறிப்பு. சமஷ்டிக் கோரிக்கை.

06. $FF_1$ (1956) : S.W.R.D பண்டாரநாயக்காவின் தனிச்சிங்கள அரசகரும மொழிச் சட்டம்.

07. $GG_1$ (1957) : பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமை.

08. $HH_1$ (1958) : தமிழர்களுக்கு எதிரான பேரினவாதிகளின் முதலாவது வெறியாட்டம்.

09. II, (1964) : ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம். இந்திய வம்சா வழியினரை இந்தியாவிற்கு அனுப்பியமை.

10. $JJ_1$ (1965) : டட்லி - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டமை.

11. $KK_1$ (1972) : 1ஆம் குடியரசு அரசியல் திட்டம் : சிங்களம், பௌத்தம் முதன்மை, தமிழர்களின் 06 அம்சக் கோரிக்கை நிராகரிப்பு.

12. $LL_1$ (1975) : TULF இன் தமிழீழக்கோரிக்கை, தமிழ்த் தீவிரவாதத் தோற்றம்.

13. $MM_1$ (1978) : 2ஆம் குடியரசு யாப்பு : சிங்களம், பௌத்தம் முதன்மை.
(1979) - ஐ.தே.க.இன் பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களைப் பாதித்தமை.

14. $NN_1$(1983) : கறுப்பு யூலை : பாரிய தமிழின அழிப்பு, நாட்டுப் பிரிவினைக்கு எதிரான சட்டமும் -TULF பா.உ.கள் பதவியிழந்தமையும்.

15. $OO_1$(1985) : திம்புப் பேச்சுவார்த்தை : தமிழர்களின் 04 அம்சக்கோரிக்கை நிராகரிப்பு.

16. $PP_1$(1987) : இலங்கை - இந்திய ஒப்பந்தம், இந்தியப்படை - LTTE மோதல்.

17. $QQ_1$(1990) : இரண்டாம் கட்ட ஈழப்போர் : ஸ்ரீலங்கா அரசு - LTTE.

18. $RR_1$(1995) : PA அரசாங்கத்தின் தீர்வுப்பொதி புஷ்வாணமானமை. 3 ஆம் கட்ட ஈழப்போர். சந்திரிக்கா அம்மையாரின் சமாதானத்திற்கான யுத்தம்.

19. $SS_1$(2002) : ரணில் - பிரபா: யுத்தநிறுத்த ஒப்பந்தம், ஜனாதிபதி - P.A கட்சியின் ஒத்துழைப்பின்மை, JVP உட்பட பேரினவாதிகளின் எதிர்ப்பு.

20. $TT_1$(2004) : UPFA அரசாங்கம் பதவியேற்பு, LTTE இனருடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்காமை, இடைக்கால நிருவாக எதிர்ப்பு, நிழல்யுத்தம் ஆரம்பம்.

21. $TT_1$ (2005) நிழல்யுத்த நெருக்கடி, சுனாமிப் பொதுக்கட்டமைப்பினை JVPயும் பேரினவாதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோட்டுப்பட விளக்கம் :-**

**01. $A_1A_2A_3$ (1870 - 1915) பௌத்த, இந்து, இஸ்லாமிய இயக்கங்கள் அல்லது இனரீதி யான அமைப்புகள் :-**

இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் தமது கிறிஸ்தவ மதத்தினை அரச ஆதரவுடன் தீவிரமாகப் பரப்பினர். அதனை எதிர்த்து சுதேச மத கலாசாரங்களைப் பாதுகாப்பதற்காக அவ்வியக்கங்கள், அமைப்புக்கள் தோன்றின. இவை வெவ்வேறாகச் செயற்பட்டாலும் கிறிஸ்தவ மதம் பரப்புகையை எதிர்த்தன.

**02. B(1919) - இலங்கைத்தேசிய காங்கிரஸ் :-**

சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பேதங்களைக் கடந்து "இலங்கையர்" என்ற ஐக்கியத்தின் சின்னமாக இவ்வமைப்பு விளங்கியது. ஆற்றல், திறமை அடிப்படையில் சேர்.பொன் அருணாசலம் அவர்கள் காங்கிரசின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு தெரிவுசெய்ய மேலுமோர் காரணமும் இருந்தது. கலால் இயக்கச் சிங்களத்தலைவர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களால் 1915இல் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களை விடுவிப்பதில் சேர்.பொன் இராமநாதன் அவர்கள் கடுமையாய்ப் பாடுபட்டார்; விடுவிக்கவும் செய்தார். அவரது சகோதரராக அருணாசலம் அவர்கள் இருந்தமையும் தலைவராகத் தெரிவு செய்யக் காரணமாக அமைந்தது. இலங்கைத் தேசிய காங்கிரசானது பிரித்தானிய ஆட்சியாளருக்கு எதிரான தேச விடுதலையின் சின்னமாகவும் விளங்கியது.

**03. C(1920) - இலங்கையின் தேசாதிபதி வில்லியம் மனிங் அவர்களின் சதி:-**

தமது ஆட்சிக்கு எதிராக அமைந்த தேசிய காங்கிரசை, எப்படியாவது முளையிலேயே கிள்ளியெறியத் தேசாதிபதி விரும்பினார். பிரித்தானியருக்கே உரித்தான பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தத் தலைப்பட்டார். இதற்காக மேல்மாகாணத்தில் அதிகரிக்கப்போகின்ற பிரதிநிதித்துவம் தொடர்பாக, காங்கிரசிலுள்ள சிங்கள - தமிழ்த் தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தினைப் பயன்படுத்த எண்ணினார். அதாவது அதிகரிக்கப்பட இருக்கின்ற பிரதிநிதித்துவத்தினைத் தமிழர்களுக்குத் தரப்போவதாகச் சிங்களத்தலைவர்கள் ஒப்பந்தம் செய்திருந்தனர். இதனைத் தேசாதிபதியும் அறிந்திருந்தார். தேசாதிபதி தனது சூழ்ச்சிக்கான காய் நகர்த்தலை மேற்கொண்டார். காங்கிரசிலுள்ள சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களை தனித்தனியாகச் சந்தித்தார். மேல் மாகாணத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க இருப்பதைக் கூறினார். அப்பிரதிநிதித்துவத்தைப் பெறுவதில் இரு சாரார்களுக்குமிடையில் முரண்பாட்டினையும், போட்டித் தன்மையையும் ஏற்படுத்தினார். 1920இல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது. தேசாதிபதி மூட்டிய முரண்பாட்டுத் தீ எரியத் தொடங்கியது. சிங்களத் தலைவர்கள், தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை நழுவவிட்டனர். இருசாராரும் தத்தமது இனத்திற்கே அப்பிரதிநிதித்துவம் வேண்டும் என அடம்பிடித்தனர். சிங்கள அரசியல் தலைமைகள் விடாக்கண்டர்கள். அத்துடன் கொடாக்கண்டர்கள் என்பதை முதற் தடவையாக நிரூபித்தனர்; முரண்பாடு முற்றியது.

**04. DD, (1921) இனப்பிரச்சினையின் தோற்றம் :-**

இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவர் சேர். பொன் அருணாசலம் அவர்கள் சிங்களத்தலைமைகளுடன் சேர்ந்தியங்க முடியாது என உணர்ந்தார். காங்கிரசில் இருந்து தனது தரப்பினருடன் 1920இல் வெளியேறினார். 1921 ஆம் ஆண்டில் தமிழ் மகாசபையை உருவாக்கினார். இவ்வமைப்பு சிங்களவர் தமிழரிடையே 2:1 என்ற பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியது. சிங்களத்தலைவர்களாக ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ரி. சமரவிக்கிரம ஆகியோர் ஒப்பந்தத்தினை மீறியமையும், தமிழ் மகாசபை தோன்றியமையும் இலங்கையில் சிங்களவர் தமிழர் இனப்பிரச்சினையின் ஆரம்ப அடித்தளமாயிற்று. இலங்கைத் தேசியவாதம், இனத்தேசிய வாதங்களாகப் பிளவடைந்தது.

தொடரும்...

- சிறிநேசன் M.A -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாம் வத்திகான் சங்கத்தின் திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளுள் முதலாவதாக வெளியிடப்பட்டது திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கமேயாகும். (மார்கழி 4ம் திகதி 1963). திருச்சபையில் வழிபாட்டின் பொருளும் செயல்பாடும் என்ன என்பதை மிகவும் தெளிவாகவும், எளிமையாகவும் எடுத்துரைப்பதை நாம் உணரமுடிகிறது. இந்தக் கொள்கை விளக்கத்தின் அமைப்பு ஏழு இயல்புகளைக் கொண்டுள்ளது.

1. திருவழிபாட்டை சீர்படுத்துவதற்கும் அதைப் பேணி வளர்ப்பதற்குமான பொதுத் தத்துவங்கள்.
2. நற்கருணை எனும் மறைபொருள்
3. பிற அருளடையாளங்களும், அருள்வேண்டல் குறிகளும்
4. திருப்புகழ் மாலை
5. திருவழிபாட்டு ஆண்டு
6. திரு இசை
7. திருக்கலை மற்றும் திருவழிபாட்டுப் பொருட்கள்.

திருவழிபாட்டுக் கொள்கை விளக்கமானது கிறிஸ்துவின் மீட்புப்பணி தொடர்ந்தும் மானிடர் மத்தியில் நினைவு கூரப்படுவதையும், நிறைவேறிக் கொண்டிருப்பதையும் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கிறது. "எனவேதான் திருவழிபாடு திருச்சபையின் ஊற்றும் சிகரமுமாக இருக்கிறது" என்பதையும், நிறைவாழ்வு அலுவல் ஒரு தொடர் தேடல் என்பதையும் இவ்வேடு வலியுறுத்துகின்றது. திருச்சபை என்பது "இறைமக்கள் சமூகம்" என்பதன் வழி திருச்சபை பற்றிய ஒரு புதிய புரிதலை உணர்த்துவதாகவும் இவ்வேடு அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. "திருவழிபாடு, தன்னகத்துள்ளவர்களை ஆண்டவரில் ஒரு தூய கோவிலாகவும் தூய ஆவிக்குள் கடவுளின் ஓர் உறைவிடமாகவும் கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறும் வகையிலும் ஒவ்வொரு நாளும் கட்டியெழுப்பப்படுகிறது. அதே நேரத்தில் கிறிஸ்துவை உலகிற்குப் பறைசாற்றத் தேவையான அவர்களது ஆற்றலை வியத்தகு வகையில் உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு, வெளி மக்களுக்குத் திருச்சபையை நாடுகளுக்கிடையே உயர்த்தப்பட்ட ஓர் அடையாளமாகத் திருவழிபாடு காட்டுகின்றது" (எண்2)

## இயல் I

திருவழிபாட்டை சீர்ப்படுத்துவதற்கும் அதைப் பேணி வளர்ப்பதற்குமான பொதுத் தத்துவங்கள்.

"நம் சாவைத் தம் சாவினால் அழித்து, தம் உயிர்த்தெழுதலினால் நமக்கு மீண்டும் உயிரளித்துள்ளார்" (உரோமைத் திருப்பலிநூல் பாஸ்கா நன்றியுரை) இயேசுவில் மீட்புப் பணி முழுமையடைந்ததை இது நமக்கு நினைவுபடுத்தி, திருச்சபையின் நிறைவாழ்வுப் பணியானது திருவழிபாட்டில் தொடர்ந்து நிகழ்த்தப்படுகின்றது என்பதையும் தெளிவுபடுத்தி நிற்கிறது. கிறிஸ்து தாமே திருவழிபாட்டுச் செயல்கள் மூலமாக, திருச்சபை இப்பணியை தொடர்ந்து நிறைவேற்ற தம் உடனிருப்பினால் துணைபுரிகின்றார். இவ்வண்ணம் திருவழிபாடு திருச்சபையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அஃது ஊற்றாகவும் உள்ளது. இதன் முழுப்பயனையும் அடைய வேண்டுமாயின் நாம் சரியான மனநிலையுடன் திருவழிபாட்டை அணுகவும் பரிந்துரைக்கின்றது.

எனவேதான் திருச்சபையானது திருவழிபாட்டுப் பயிற்சியையும் அதில் செயல்முறையில் பங்குகொள்ளுதலையும் ஊக்குவிக்கக் கடமைப்பட்டுள்ளது. இதற்காக திருவழிபாட்டைப் பயிற்றுவிக்கும் பேராசிரியர்களை உருவாக்குதல் இன்றியமையாத ஒன்றாகும்.

இப்பயிற்சியானது திருப்பணியில் ஈடுபடுவோர்க்கு மட்டுமல்லாது, அனைத்து விசுவாசிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும் கொடுக்கப்பட வேண்டிய அவசியத்தையும் இவ் வேட்டில் நாம் காணக்கூடியதாக உள்ளது. அத்தோடு கூட கிறிஸ்தவ மக்கள் ஏராளமான அருளை அதிக உறுதியாய் அடைய திருவழிபாட்டில் பொதுவான சீரமைப்பைக் கொண்டுவரவும் திருச்சபை உறுதி பூண்டுள்ளது. இதற்காகத் தாமே கீழ்வரும் பொது விதிகளை அமைத்துத் தந்திருக்கின்றது.

அ) பொது விதிகள்:
திருவழிபாட்டை ஒழுங்குபடுத்தும் உரிமை திருச்சபை ஆட்சியாளருக்கே உரியது.
மரபும் வளர்ச்சியும் :- நலமான மரபைப் பாதிக்காத வகையில் சட்ட முறைமையான வளர்ச்சிக்கு வழிவகுக்க, திருவழிபாட்டில் திருத்தி அமைக்கப்பட வேண்டிய ஒவ்வொரு பகுதியையும் முன்னாய்வு செய்தல் வேண்டும்.
திருவழிபாட்டில் விவிலியத்தின் முதன்மையை ஊக்குவிக்க வேண்டும்.
திருவழிபாட்டு நூல்களை திருத்தி அமைத்தல்.
ஆ) திருவழிபாடு திருச்சபையின் ஆட்சியாளருக்கும், சமூகத்திற்கும் உரிய செயல் என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
இ) திருவழிபாட்டின் கற்பிக்கும் பண்பையும், அருள்பணி சார்ந்த பண்பையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.
ஈ) வெவ்வேறு மக்களின் பண்பாட்டிற்கும் மரபிற்கும் ஏற்ப திருவழிபாட்டை மாற்றியமைத்ததன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அத்தோடு கூட ஆயரின் தலைமையினை மையமாகக் கொண்டு மறைமாவட்டத்திலும், பங்குகளிலும் திருவழிபாட்டு வாழ்வை ஊக்குவிக்கவும், நாடளாவிய ரீதியிலும், மறைமாவட்ட ரீதியிலும், திருவழிபாட்டுக் குழுக்களை அமைக்கவும் இங்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### இயல் II

**தூய்மை மிகு நற்கருணை என்னும் மறை நிகழ்வு:**

ஆண்டவரின் இராவுணவை நினைவு கூர்வதன் மூலம், அவரது நினைவாக நம் மீட்புக்காய் திருச்சமூகம் ஒப்புக்கொடுக்கும் ஒப்பற்ற பலியே நற்கருணையாகும். இது இரக்கத்தினதும், ஒற்றுமையினதும் அருளடையாளமாகவும், அன்புப் பிணைப்பின் பாஸ்கா விருந்துமாகும். எனவேதான் “விசுவாசிகள் பார்வையாளர்களாகயிராது சடங்குகள், இறைவேண்டல் ஆகியவற்றின் வாயிலாக அதனை நன்றாகப் புரிந்துகொண்டு, அத்தூய செயலை உணர்ந்து அதில் பக்தியுடனும், செயல் முறையிலும் பங்குபெற வேண்டும்” (எண் 48). இவ்வாறு விசுவாசிகளின் பங்கேற்பை ஊக்குவிக்கும் முகமாக, திருப்பலியின் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் உரிய தனி இயல்பும், அவை ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்பும் சீரமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

மேலும் விவிலியச் செல்வங்களை, சிறப்பாக இறைவார்த்தைப் பந்தியிலும், மறையுரை வாயிலாகவும் மக்கள் பெற்றுக்கொள்ள உதவுவதுடன், நம்பிக்கை கொண்டோரின் மன்றாட்டிற்கும் சிறப்பிடம் வழங்கப்படல் வேண்டும். இதனை ஊக்குவிக்கும் முகமாக சொந்த மொழியினை உபயோகிப்பது சாலச் சிறந்ததாகும். வார்த்தையினால் ஊட்டம் பெற்ற விசுவாசிகளுக்கு, அப்ப, இரச வடிவில் நற்கருணை வழங்குதலும் இங்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இஃது அந்தந்த இடத்து ஆயரின் தீர்ப்புக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படலாம். எது எவ்வாறிருப்பினும் திருப்பலியின் ஒருமைத் தன்மையை மக்களுக்கு விளங்கப்படுத்துவது சிறந்ததாகும்.

-அருள்தந்தை
சுகுனேந்திரன் குருஸ்

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி - 6

**பரிசு பெறுவோர்**

| 1ம் பரிசு 300/= | 2ம் பரிசு 200/= | 3ம் பரிசு 100/= |
|---|---|---|
| வி. காமலின் செல்சியா<br>அருளானந்தர் வீதி<br>பெரியகல்லாறு - 01<br>கல்லாறு | பி. தக்ஷனா<br>10. புனித ஜூட்லேன்,<br>பூம்புகார்வீதி, பாலையூற்று<br>திருகோணமலை. | ர. எமிலிரஜி<br>11ம் குறுக்கு<br>விமான நிலைய வீதி,<br>திருப்பெருந்துறை,<br>மட்டக்களப்பு. |

போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடல்கோள் எம்மைப் பிரித்தது**

ஒரு காலத்திலே இலங்கை தென்னிந்தியாவோடு ஒரே நிலப் பரப்பாய் இருந்ததென்றும் அது பிற்காலத்தில் கடல்கோளால் அழிவுற்று இந்தியாவினின்று பிரிந்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இந் நிலப்பரப்பை லெமூரியாக் கண்டம் என்பர். இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கே குமரி ஆறு என்று ஒன்று ஓடியதாகவும் அதற்கும் தெற்கே பஃறுளி எனும் மற்றுமோர் ஆறு ஓடியதாகவும் வி. கலியாணசுந்தர முதலியார் மேற்கோள் காட்டுகின்றார். இவ்வாறுகளின் இருப்பை, "நெடியோன் நன்னீர் பஃறுளி ஆற்று மணலினும் பலவே" எனவும், "நெனாஅ உறுகெமுகுமரியின் தெற்கும்", எனவும் வருகின்ற புறநானூற்று அடிகளாலும், இவ்வாறுகளின் அழிவை "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" என வருகின்ற சிலப்பதிகார அடிகளாலும் தெளியலாம். எனவே இவ்வாறுகளின் அழிவு கடல் கோளால் ஏற்பட்டது; இலங்கையும் இந்தியாவிலிருந்து நீரால் பிரிக்கப்பட்டது. எனவே ஒருகாலத்தில் இலங்கை இந்தியாவோடு இணைந்திருந்தபோது இந்நிலப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் யாவர் என்ற வினா எழுகின்றது. அவர்கள் எங்கிருந்து வந்தனர்? எத்தகைய நாகரிகத்தை உடையவர்கள் என்பதை ஆராய வேண்டும்.

**ஆரியருக்கு முன் திராவிடர்:**

பல அறிஞர்களின் அபிப்பிராயப்படி இப்பிரதேசங்களில் வாழ்ந்த ஆதிக்குடிகள் திராவிடர்களே என்றும் அவர்கள் நாகரிகம் படைத்தவர்களாய் இருந்தார்களென்றும், அவர்களே நாகரிகத்தின் பல அமிசங்களையும் பிற்காலத்தில் வந்த ஆரியர்களுக்குப் புகட்டினார்கள் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அடிச்சநல்லூர் என்ற இடத்திலும், ஹரப்பா, மொகஞ்சதாரோ என்ற இடங்களிலும், மொசப்பெத்தேமியாவிலுள்ள "ஊர்" என்ற இடத்திலும், ஈழத்தின் மேற்குக் கரையோரங்களில் உள்ள பல இடங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருட்கள் இப்பகுதிகளிலே திராவிடர்கள் குடியேற்றம் அமைத்து வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்றுகள் தருகின்றன. இப்பிரதேசங்களிலே குறிப்பாக மொசப்பெத்தேமியாவில் வழங்குகின்ற சில திராவிடச் சொற்கள், "ஊர்" என்ற பெயர் முதலானவை இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றன. திராவிடர்களின் தாயகத்தை ஆராய்ந்த அறிஞர்கள் தமக்குள்ளே அபிப்பிராயபேதம் கொண்டுள்ளார்கள். சிலர், அவர்கள் இந்தியாவிலிருந்து மொசபெத்தேமியாவிற்குச் சென்றிருக்கலாமெனவும், மற்றும் சிலர், மொசப்பெத்தேமியாவிலிருந்தே அவர்கள் இந்தியாவிற்கும் சிறப்பாகத் தக்கணத்திற்கும் ஈற்றில் இலங்கைக்கும் வந்திருக்கலா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனவும் கூறுவர். சுவாமி ஞானப் பிரகாசரும் பின்னைய கருத்தையே கொண்டுள்ளார். ஆராய்ச்சியாளரின் முடிவுகள் எப்படி இருப்பினும் ஆரியர் வருகைக்கு முன் இப்பிர தேசங்களில் திராவிடர்கள் குடியேறி வாழ்ந்தார்கள் என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுகின்றனர்.

எனவே ஈழத்தில் கி.மு.6ம் நூற்றாண்டில் ஆரியர் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் திராவிடர்களே என சுவாமி ஞானப்பிரகாசர் பல சான்றுகள் தந்து விளக்குகின் றார். கி.பி. 6ம் நூற்றாண்டில் மகாநாமதேரரால் எழுதப்பட்ட ஈழத்து வரலாற்று மரபைக் கூறும் மகாவம்சம், வங்க நாட்டிலிருந்து விஜயனும் அவனது சகாக்களும் இலங்கைக்கு வந்தபோது இங்கு வாழ்ந்த மக்கள் இயக்கர், நாகர் எனக் கூறுகிறது. மகாநாமதேரர் வெளிப்படையாகக் கூறுவது போல இவர்கள் அநாகரிகமானவர்களா? இவர்கள் இருவேறு சமய கலாசாரக் குழுக்களைச் சார்ந்தவர்களன்றி இனத்தால் ஒன்றுபட்ட திராவிடர் கள் என்று சான்றுகள் தருகின் றார். நாகர்கள் நாகத்தை வழிபட்ட தால் அப்பெயரையும், இயக்கர்கள் பேய்களைப்போல் யுத்தம் புரிந்த காரணத்தினால் அல்லது பேய் களை வழிபட்ட காரணத்தினால் அப்பெயரையும் பெற்றிருக்கலாம். மகாநாமதேரரே இவர்களைப்பற்றி வேறொரு இடத்தில் குறிப்பிடும் போது, அவர்களின் போர் முறை களைப் பற்றி வர்ணிக்கும்போது அவர்கள் நாகரிகமானவர்கள் என் பதைத் தம்மை அறியாமலே வெளிப் படுத்துகின்றார். மகாவம்சத்தை ஊன்றிப் படிப்பவர்களுக்கு இது தெளிவாகும். பௌத்த மதத்தைச் சாராதவர்களையும் சிறப்பாக மகா விகாரைக்கு எதிரானவர்களையும் அநாகரிகமானவர்கள் அல்லது பெரும் பாவத்தைத் தேடிக் கொண் டவர்கள் என்று சாடுவதையும் நாம் அவதானிக்கும் பொழுது இயக்கர், நாகர் எனப்படுகின்ற திராவிடர் களையும் அவர் இக்கண்ணோட் டத்திலேயே பார்த்திருக்க வேண்டும். எனவே இயக்கர், நாகர் அக்காலச் சூழ் நிலையில் நாகரிகம் படைத்த வர்களே என்றும் அவர்களது நாக வழிபாடும் பேய் வழிபாடும் இன்ற ளவும் நாம் சிங்கள மக்களிடையே காணக்கூடியதாகவும் இருக்கின் றது.

விஜயனுக்கு முற்பட்ட காலத்தில் திராவிடர்கள் இந்நாட் டிலே பல குடியேற்றங்களைத் தாபித்து வாழ்ந்தார்களென்பது, பிற்காலத்தில் சிங்கள மயப்படுத்தப் பட்ட தமிழ் இடப்பெயர்களிலிருந் தும் அறியலாமென சுவாமி ஞானப் பிரகாசர் கூறுகின்றார்.

சிங்கள மன்னர்களால் கட்டப்பட்ட வாவிகளைப்பற்றி மகா வம்சமும் ஏனைய பாளிச் சிங்கள நூல்களும் விதந்து கூறுகின்றன. ஆனால், மன்னார்ப் பிரதேசத்திலே இருக்கின்ற இராட்சத ஏரி அல்லது மகாவாவி யாரால் கட்டப்பட்டது என்பதை இந்நூல்கள் கூறாமல் விட்டதன் காரணம் யாதோ? இதனால் திராவிடர்களே இக் குளத்தை நிருமாணித்திருக்க வேண்டும். கி.பி. 12ம் நூற்றாண் டிலே ஆட்சிபுரிந்த பராக்கிரமபாகு போன்றோர் இக் குளத்தைச் சீர்திருத்தி இருக்கலாம் என ஊகிக்கலாம். எனவே ஈழத்து ஆரியர்கள் திராவிடர்களிட மிருந்தே நீர்ப்பாசனக் கலையைக் கற்றிருக்கலாம்.

**பாண்டியத் தொடர்பு:**

மேலும் ஆரியர் வருகைக்குப் பின்னரும் ஈழத்திலே திராவிடரின் செல்வாக்கு அதிகமாக இருந்தபடி யினால் ஈழத்துத் திராவிட அரச குடும்பத்தின் செல்வாக்கைக் குறைத்துத் தனது மேலாதிக்கத் தைச் செலுத்துவதற்காக விஜயன் பாண்டிய இளவரசியை மணந்த தோடு தனது சகாக்களுக்கும் பாண்டிய நாட்டிலிருந்தே மணப் பெண்களை வரவழைத்ததும் ராஜ தந்திர முறையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு திருமண உடன்படிக்கை எனலாம். மேலும் இந்தத் திருமண உறவு ராஜதந்திர ரீதியில் வலுப் பெற்றிருந்த காரணத்தினாலே விஜயன் சந்ததியின்றி இறந்த பொழுது பாண்டுவாசதேவ என்னும் மதுரை இளவரசியின் புதல்வன் இந்நாட்டுக்கு அரசனாகின்றான். மேலும் பண்டுகாபயன் காலத்தில் நாக வம்சத்தைச் சார்ந்த ஓர் இளவரசன் இணையரசனுக்குரிய அந்தஸ்தோடு ஆட்சி புரிந்ததாக மகாவம்சமே கூறுகின்றது. கி.பி.2ம், 3ம் நூற்றாண்டுகளில் ஈழத்தில் ஆட்சிபுரிந்த அரசர்கள் மகாலக்க நாக, சோர நாக, சூள நாக, மகா நாக எனக் குறிப்பிடப்படுவதி லிருந்து நாகர்களின் செல்வாக்கு ஆரியர்களின் வருகைக்கு சுமார் 800 ஆண்டுகளுக்குப் பின்னரும் செல்வாக்குப் பெற்றிருந்ததை நாம் அவதானிக்கலாம், அல்லது இன் னும் பெருந்தொகையாக செல்வாக் குடன் இருந்த நாகர்களின் நன்மதிப்பைப் பெறும் நோக்கத்து டன் சிங்கள அரசர்கள் இந்தப் பெயரைப் பூண்டிருக்கலாம். கி.பி. 9ம் நூற்றாண்டிற்கும் 14ம் நூற்றாண் டுக்குமிடையில் ஆட்சி புரிந்த சோழ அரசர்கள் தமது பண்டைய பெயர் களான கிள்ளி, வளவன், சென்னி ஆகியவற்றுக்குப் பதிலாகத் தன் காலத்து வடநாட்டுச் செல்வாக் குக் காரணமாக ராஜராஜசோழன், வீரராஜேந்திரன் ஆகிய வடநாட்டுப் பெயர்களையே பூணுகின்றார்கள். இதனையே சிங்கள அரசர்களும் செய்திருக்கலாம்.

**மருவிய சொற்கள்**

இன்னும் சிங்கள மொழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக் காலத்துத் தமிழ்ச் சொற்கள் பல மருவி ஒலிப்பதையும் நாம் அவதானிக்கலாம். நற்றினையில் வரும் நண்பனைக் குறிக்கும் 'யாழ' என்பது சிங்களத்தில் யாலுவா என வழங்குகின்றது. இடப்பெயர்களில் 'திண்ணை' என்பது 'தென' எனவும் 'கோடு' என்பது 'கொட' எனவும் மருவி ஒலிக்கின்றது. இங்கு 'கொடு' மலையைக் குறிக்கும். மதுவைக் குறிக்கும் பண்டைய 'இறால்' என்பது 'றா' என்று மருவி ஒலிக்கின்றது. இவ்வாறே பல இடப் பெயர்களும் மருவி ஒலிக்கின்றன.

எனவே ஈழத்துக்கு ஆரியர் வருவதற்கு முன்னர் நாகரிகம் படைத்த திராவிடர்களே குடியேற்றங்களை அமைத்து வாழ்ந்தார்கள் எனவும் பின்னர் தெற்கிலே வாழ்ந்தவர்கள் ஆரியர்களோடு இனக் கலப்புச்செய்து சிங்களவர்களாக மாறினார்களெனவும் ஊகிக்கலாம். இதனை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஈழத்தின் தென்பாகத்திலே அகழ்ந்தெடுக்கப்பட்ட பல கல்சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. கி.மு. 1200ம் ஆண்டளவிலேயே இந்தியாவில் முருக வணக்கம் இருந்ததாக அடிச்சநல்லூர்ப் புதைபொருள்கள் கூறுகின்றன. ஈழத்தின் தென்பாகத்திலே இருக்கின்ற கதிர்காமத்தில் இந்த முருக வழிபாடு பண்டைக் காலம் தொட்டு இருந்து வருவதைச் சிந்திக்கும் பொழுது இப்பகுதிகளிலே பண்டைக்காலந் தொட்டே திராவிடர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை அறியலாம்.

தமிழருடைய நாகரிகம் மிக முற்பட்ட காலத்தில் ஈழத்தில் மட்டுமல்ல கிரேக்கம், சீனம் ஆகிய நாடுகளிலும் பரவி இருந்ததென்பதற்குச் சீன, கிரேக்க இலக்கியங்கள், புதை பொருட்கள் சான்று தந்து நிற்கின்றன.


1. ஹேனஸ்ட் ஹெக்கல், ஹிஸ்டரி ஒவ் கிரியேஷன், ஸ்கொட் எலியட், லொஸ்ட் லெமுறியா.
2. வி.க.கட்டுரை, பண்டைத் தமிழர் பண்பாடு, பக்கம் 1, 2.
3. கே.எம். பணிக்கார், *A Survey of Indian History. Sir. John Marshall: Tamil Culture, Page 320 of 1957. Hall: Ancient History of the Near Fast. Will Durant: Our oriental Heritage. R.B. Dixon: Tamil Culture, Page 323 of 1957,*
4. சுவாமி ஞானப்பிரகாசர்: *The Kings of Jaffna. Ch,1.*
5. மகாவம்சம் 37ம் அதி. வசனம் 50
6. *Sir. J. Emerson Tennents: Ceylon*
7. *Swami Gnanapragasar: Tamil Culture, Page 31 of 1952*
8. *Ibid*
9. அடிச்சநல்லூர் புதைபொருள்:


அருட்செல்வன்.

**எஸ் ஏ.ஜ.மத்தியூ,**

(நன்றி. சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா மலர் 1972)


# விண்ணுலக வாழ்வில் 31ம் நாள் நினைவு

## (25-04-2007)

**மனித வாழ்வு**
**1924 - 12 - 10**

**இறை வாழ்வு**
**2007 - 03 - 26**



**திருமதி. பிரான்சிஸ்**
**ஆரோக்கியம்மா (றோஸ்மலர்)**

அன்பின் இருப்பிடமாய்
ஆசீர்வதித்தெம்மை
வழிநடாத்திய
எம் அன்பு அன்னையே
வாழ்க்கைப் போராட்டம்
மனிதனுக்கே
மனம் போல் வாழ்வாய்
பாரினிலே
எனத் தேற்றிய
உன் மொழி தேடி
தவிக்கின்றோம்

இன்றும் நேசிக்கும்
குடும்பத்தினரும் உறவினர்களும்
3ம் குறுக்குத் தெரு,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15 - 06 - 2007




# விவிலியம் கற்போம் - 56

(விடுதலைப் பயணம் 36:1-36)
**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

பெட்சலேலும் ஒகொலியாபும் மேலும் தூயக அமைப்பு வேலையனைத்தையும் செய்யத் தெரியுமாறு ஆண்டவரிடமிருந்து அறிவுக் கூர்மையும் தொழில் திறமையும் பெற்றிருந்த ......................... யாவரும் ஆண்டவர் கட்டளையிட்டபடி வேலை செய்யட்டும் என்றபடி அனைவரையும் அழைத்தார். தூயக வேலைக் கென்று இஸ்ரயேல் மக்கள் கொண்டுவந்த காணிக்கைகள் யாவற்றையும் ......................... முன்னிலையிலிருந்து எடுத்துச்சென்றனர். தொடர்ந்து தன்னார்வக் காணிக்கைகள் காலை தோறும் வந்தவண்ணமாயிருந்தன. கலைஞர் மோசேயை நோக்கி "மக்கள் கொண்டு வருவது வேலைக்கும் அதிகமாகவே உள்ளது" என்று அறிவித்தனர். அப்போது மோசே ஆணோ......................... யாராயினும் இனிமேல் தூயகத்துக்காகக் காணிக்கை கொண்டு வரவேண்டாம்" என்று ஒரு கட்டளை பிறப்பிக்க, அது ......................... எங்கும் அறிவிக்கப்பட்டது. எனவே மக்கள் எதையுமே கொண்டு வருவதை நிறுத்தி விட்டனர். பணியாளருள் கலைத் திறமை மிக்கோர் அனைவரும் ஒன்று சேர்ந்து ......................... பத்துத் திரைகளால் அமைத்தனர். இவற்றுள் ஐந்து திரைகள் ஒன்றாகவும், ஏனைய ஐந்து திரைகள் ஒன்றாகவும் இணைக்கப்பட்டன. திரு உறைவிடத்தில் மேலே ......................... அமைப்பதற்கு வெள்ளாட்டு மயிரால் மூடுதிரைகள் செய்தார். மேலும் செந்நிறப் பதனிட்ட செம்மறி ஆட்டுக்கிடாய்த் தோல்களாலும் கூடாரத்துக்கு ஒரு ......................... செய்தார். திரு உறைவிடத்துக்கான செங்குத்தாய் நிற்கும் சட்டங்களை அவர் சித்திம் மரத்தால் செய்தார். சித்திம் மரத்தால் குறுக்குச் சட்டங்களையும் செய்தார். அவர் சட்டங்களை ......................... பொதிந்தார். அதிலுள்ள குறுக்குச் சட்டங்களைச் செருகுவதற்கான வளையங்களையும் பொன்னால் செய்தார். மேலும் அவர் ஒரு ......................... செய்தார். நீலம் கருஞ்சிவப்பு சிவப்பு நிற நூலாகவும் முறுக்கேற்றி நெய்த மெல்லிய நார்ப்பட்டாகவும் கலைத்திறனுடன் கூடிய ......................... அமைந்ததாகவும் அதைச் செய்தார். அதற்காகச் சித்திம் மரத்தால் நான்கு தூண்கள் செய்தார். அவற்றைப் பொன்னால் பொதிந்து பொன் கொக்கிகளையும் பொருத்தி விட்டார்.

**விடைகள் : பாளையம், பொன்னால், கெருபுகள், தொங்குதிரை, மோசே, கலைஞர், பெண்ணோ, கூடாரம், திருஉறைவிடத்தை, மேல்விரிப்பு.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 56

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக் கோடிடுக)

1. சீனப் பெருஞ்சுவரின் நீளம்
   (1500 மைல், 1200 மைல், 1000 மைல்)

2. சனி கிரகத்தைச் சுற்றிவரும் நிலவுகளின் எண்ணிக்கை
   (10, 15, 30)

3. 'தேவதாஸ்' என்னும் புகழ் பெற்ற நாவலை எழுதியவர்
   (காண்டேகர், சரத்சந்திரர், கல்கி)

4. உலகின் மிக உயர்ந்த மிருகம்
   (ஒட்டகம், ஒட்டகச் சிவிங்கி, யானை)

5. கிறிஸ்மஸ் தினத்தன்று பிறந்த பாகிஸ்தான் தலைவர்
   (சுல்பிகார் அலி பூட்டோ, முஸாரப், முகம்மதலி ஜின்னா)

6. 'பகாப்பதம்' என்பதற்கு எடுத்துக்காட்டு
   (கண்டான், வந்தான், கல்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 56
தொண்டன்
அ.பெ. எண் – 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 54 விடைகள்

சேகரிப்பு, ஆண்டவர், நாட்டை, முதல், மோசேயை, உடன்படிக்கை,
தண்ணீர், இரண்டையும், ஆரோனும், முக்காடு

## அறிவை வளர்ப்போம் - 54 விடைகள்

1) மாமல்லபுரம், 2) திருமூலர் 3) சீனா 4) காடுகொள்ளாது,
5) சிரசு, 6) வினையெச்சம்

**இம்முறை ஒருவர் மட்டுமே இருபிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி பரிசுபெறுவோர்**

- A. ஹர்ஷினி
  ஆலய வீதி,
  திருக்கோவில்.
- P. டயஸ்
  இல- 36 பிரதானவீதி,
  கூழாவடி.

**போட்டியில் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்துப் பரிசுபெறுவோர்**

- ஜோசப்லிண்டன் வியன் றெனோச்
  காளி கோவில் வீதி
  புதுக் குடியிருப்பு,
  வாழைச்சேனை.
- ர.ரஜிவனி
  11ம் குறுக்கு
  விமானநிலைய வீதி,
  திருப்பெருந்துறை,
  மட்டக்களப்பு.


**பாராட்டுப் பெறுவோர்**

- K. செரின்
  93/2 நீதிமன்ற வீதி,
  திருகோணமலை.
- R. டிலுஸ்கரன்
  இல. 03 பெனான்டோ வீதி,
  மட்டக்களப்பு..

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registeredasa News Paperin Sri Lanka.



# காற்றில் கலந்துவரும்....

**இலங்கை வானொலி தேசிய சேவையில்**

**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்**

**ஜூன் – 2007**

**கத்தோலிக்க நற்சிந்தனை – நேரம் காலை 6.10 மணி.**

நாள் :- 09, 10, 11, 12, 13, 14, 15,
23, 24, 25, 26, 27, 28, 29.

**புதிய உலகம் – நேரம் மாலை 6.30 மணி**

நாள் :- 03, 17.

**(வழிபாடு, திருச்சபைச் செய்திகள், சிந்தனை உரை, நாடகம், போட்டி, பாடல்கள்)**

**சிறுவர் உலகம் – நேரம் மாலை 6.45 மணி**

நாள் :- 05, 19.

**(கதையும் கருத்தும், விவிலிய வினா விடைப்போட்டி, கவிதை, கட்டுரை, பாடல்கள்)**

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org